விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 03 செவ்வாய்க்கிழமை (17.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தமிழின அழிப்பை அரசே நிறுத்து; ஆக்கிரமிப்பு இராணுவமே வெளியேறு

### கோப்பாயில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு வளலாய் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றக் கோரியும், அம்மக்களை வேறு பகுதிகளில் குடியேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று திங்கட்கிழமை காலை மாபெரும ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற இப்போராட்டத்தினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

ஆயினும் குறித்த போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும்ஜனநாயக மக்கள்முன

20ஆம் பக்கம் பார்க்க....

## சொந்தக் காணிகளில் மக்களை மீள்குடியேற்றம் செய்வீர்களா?

### கேள்விக்கான பதில் இராணுவத்திடமில்லை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கும் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் விரைவில் அமுல்படுத்த போவதாக தெரிவித்துள்ள இராணுவத்தினர் அந்த மக்களுக்கு சொந்தமான காணிகளை வழங்கி மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்காமல் எழுந்துசென்ற சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.பலாலி பாதுகாப்பு கட்ட

20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணைக்குழு விரைவில்

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற கொள்வதற்காக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவில் இடம்பெறும் இரண்டு நிபுணர்கள் குறித்த விபரங்கள் அடுத்த சில வாரங்களுக்குள் அரசாங்கத்துக்கு அறிவிக்கப்படும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ரவினா சாம்தாசனி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று

20ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார எழுச்சி பேரணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபை முதல்வர தலைமையில் ஊழியர்கள் அனைவரும் இணைந்து சுகாதார எழுச்சி பேரணியொன்றினை நாளை மறுதினம் 19ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபையின் செயலா

20ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீனவர்கள் 39 பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 39 பேர் நேற்று மாலை யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய கடற்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மேற்படி மீனவர்கள்

20ஆம் பக்கம் பார்க்க....

# சமாதானத்தை ஏற்படுத்த புலிகள் உடன்படவில்லை

### பொலிவியா நாட்டில் மகிந்த உரை

*(சாண்ட் க்ருஸ்)*

***நாட்டை ஆட்சி செய்த பல அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முனைப்புக்களைத் தொடர்ந்த போதிலும் வேறுவிதமான முயற்சிகளால் புலிகள் சமாதானத்திற்கு உடன்படவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.***

பொலிவியா நாட்டின் சாண்ட க்ருஸில் நடைபெற்ற ஜி 77 பொன் விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் சகல அரசாங்கங்களும் பேச்சுவார்த்தைகள் மூலம் நாட்டில் இடம்பெற்ற மோதலை தீர்க்க முயற்சித்தன. எனது அரசாங்கமும் அதனையே செய்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் வேறு விதமான யோசனைகளால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தது.

19ஆம் பக்கம் பார்க்க....




## வீட்டினுள் புகுந்து வாள்வெட்டு

### மாணவன் பலி; இரு சகோதரர்கள் படுகாயம்



யாழ்.கோண்டாவில் பகுதி நாராயணன் கோவிலடியில் உள்ள வீட்டிற்குள் புகுந்த இளைஞர் குழுவால்

19ஆம் பக்கம் பார்க்க....

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யர்ழ்ப்பாணம்)

யாழ்.மறவன்புலோ மேற்கிலுள்ள வீடொன்றில் இருந்து 3 பிள்ளைகளின் தாயான எஸ்.ரஞ்சனாதேவி (வயது 46) என்பவர் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார்

20ஆம் பக்கம் பார்க்க....

## ஆணொருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலையில் மீட்கப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

20ஆம் பக்கம் பார்க்க....

## தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட மாட்டோம்

### மண்டைதீவு மீனவர்கள் முன்மாதிரி



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடமாட்டோம என கூறி ஒரு கோடியே 20 இலட்சம ரூபாய் பெறுமதியான வலைகளை யாழ்.மண்டைதீவு மீனவர்கள் தாமாக முன்வந்து நேற்று எரித்துள்ளனர்.

இலங்கையில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவதற்கு

20ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளுத்கம வன்செயலில் 3 முஸ்லிம்கள் பலி

(கொழும்பு)

களுத்துறை மாவட்டம் அளுத்கமவில் கடும் போக்கு பௌத்தர்களுடன் நேற்று முன்தினம் நடந்த மோதலில் 3 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள் கூறியுள்ளனர்.

கடந்த இரு வருடங்களாக கடும்போக்கு சிங்கள பௌத்தவாதிகள் முஸ்லிம் எதிர்ப்பு போராட்டங்களை நடத்திவருகின்றனர். வழமையாக பௌத்த பிக்குமார் இவற்றுக்கு தலைமை தாங்குவது வழக்கம்.

இவை அண்மைய வருடங்களில் மத வன்முறைகளாக உருவெடுத்துள்ளன.

30 தொடக்கம், 40 வயதுகளைச் சேர்ந்த 3 முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் இறந்ததை அடுத்து முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்சநிலை உருவாகியுள்ளது.

ஒரு மசூதிக்கு அருகே முஸ்லிம்எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு வந்த குழு ஒன்றுக்கும், முஸ்லிம்களுக்கும் நேற்று முன்தினம் இரவு நடந்த மோதலின் போது இது நடந்துள்ளது.

குறைந்தபட்சம் மேலும் 7 பேராவது இதில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்த பள்ளிவாசலில் இரத்தக் கறை காணப்பட்டுள்ளது.

அருகில் உள்ள தெருவில் பல இடங்களில் துப்பாக்கிக் குண்டு தாக்கிய அடையாளங்களும், இரத்தக்கறையும் காணப்பட்டன.

அதில் இருந்து சிறிது தூரத்தில் பல முஸ்லிம் வணிக நிலையங்கள் எரிக்கப்பட்டிருந்தன.

அரசாங்க ஆதரவுடன் பௌத்தர்கள் இனவாதத்தை பரப்புவதாக உள்ளூர்க்காரர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சம்பவங்களுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொறுமை காக்குமாறும் ஜனாதிபதி தனது டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளார். (செ-11)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி நிருபராணி அமர்தலிங்கம்

எமது கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் செல்வி நிருபராணி அமிர்தலிங்கம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்குத் தெரிவானமையையிட்டு எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் கல்விச் சேவையில் தடம் பதித்து இன்னும் பல உயர்வுகள் காண வாழ்த்துக்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

(சி-7676)


# முஸ்லிம் மக்கள் மீது வன்முறை; த.தே.கூட்டமைப்பு கடும் கண்டனம்

## ஐ.நா. விசாரணைக்குழுவை அனுமதிக்கவும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் அரசியல்வாதிகள், அமைச்சர்கள் அரசாங்கத்துக்கு துதிபாடுவதைவிடுத்து இலங்கைக்கு விசாரணைக்கு வரவுள்ள ஐ.நா.விசாரணைக்குழுவினை அனுமதிக்குமாறு அரசுக்கு அழுத்தங்களை விடுக்க வேண்டும் என்பதையே அளுத்கம சம்பவம் எடுத்துக்காட்டுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அளுத்கமவில் இடம்பெற்றுவரும சம்பவங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அளுத்கமவில் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடும் கண்டனத்தினை தெரிவித்துக்கொள்கின்றது.

முஸ்லிம் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் இந்த வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் பொது பல சேனா மட்டுமல்ல.இது அரசாங்கத்தின் முழு ஆசியுடனேயே நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவமானது இந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் சுதந்திரமாக வாழமுடியாது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இந்தவேளை சிறுபான்மை மக்கள் ஒன்றுபட்டு குரல் எழுப்பவேண்டிய தேவ்வயினையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

இந்தவேளையில் அரசாங்கத்துக்கு துதிபாடும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்கள் நிலையில் இருந்து மாறி இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் மேற்கொண்டுவரும் மீறல்களை விசாரணை செய்ய இங்கு வர எண்ணியுள்ள ஐ.நா.விசாரணைக்குழுவினை இலங்கைக்குள் அனுமதிக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்கவேண்டும்.

எங்களுக்கான ஒரு பலம் அமையும்போதே எங்களை இன்னொருவர் அச்சுறுத்தும் நிலையை நாங்கள் இல்லாமல் செய்யமுடியும்.

இந்த சம்பவம் அளுத்கமவுடன் முடிவடையும் என்று நாங்கள் கருதவில்லை. கடந்த காலத்தில் இந்த நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வர்த்தக நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறு நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இதுவரையில் என்ன நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்கும் முதுகெலும்பு இல்லாத முஸ்லிம் அரசியல்வாதிகள் சிந்தித்து பார்க்கவேண்டும்.

எனவே இது தொடர்பில் சிறுபான்மை சமூகங்கள் தங்களுக்கிடையில் உள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (செ-11)

## அளுத்கம சம்பவம்; அமெரிக்கா கண்டனம்

(கொழும்பு)

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை அமெரிக்கா கண்டித்துள்ளது.

இந்த சம்பவங்களை கண் டித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

சட்ட ஒழுங்கை பேணி பொதுமக்களின் உயிர்களையும், வழிபாட்டு ஸ்தலங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், வன்முறைகளை தவிர்த்து, பொறுமை காத்து, சட்ட ஆட்சியை மதித்து நடக்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்வதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

# முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த தீவிரவாதம் அதிகரிப்பு

## கிழக்கு முஸ்லிம் பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம்களை இலக்கு வைத்து பொது பல சேனா போன்ற பௌத்த தீவிரவாத சக்திகள் மேற்கொண்டு வரும் மூர்க்கத்தனமான செயற்பாடுகளை மனித உரிமைகளுக்கான கிழக்கு முஸ்லிம் பல்கலைக்கழக ஆசிரியர்கள சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கை அரசின் இனத்துவ விரோதச் செயற்பாட்டின் தொடர்ச்சியாக அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் முஸ்லிம்களுக்கு எதிரான மத வன்முறைகள் உள்ளன.

யுத்தம் முடிவுற்ற நிலையில் நாட்டில் இனத்துவ மத அடிப்படைவாதத்தினை முன்னிறுத்தி பொது பல சேனா, சிங்கள ராவய போன்ற பல அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

இவ்வமைப்புக்களுக்கு அரசின் தொடர்ச்சியான ஆதரவு இருந்துவருவதும் நாட்டின் இன ஐக்கியத்திற்கு ஊறுவிளைவிற்கும் செயற்பாடுகளில் அவை முனைப்புக் காட்டுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

மத ரீதியான சுதந்திரத்திற்கு இலங்கையின் அரசியலமைப்பு உத்தரவாதம் அளித்துள்ளபோதிலும், சிறுபான்மை சமூகங்கள் தமது மத சுதந்திரத்தினை அனுபவிப்பதில் அண்மைக்காலமாக பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

மத ரீதியான அவர்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொறுப்புள்ள ஜனநாயக அரசாங்கம் ஒன்று பாராமுகமாக இருப்பது சிறுபான்மையினர் மீதான அரசின் இன ஒடுக்குதல் கொள்கையினை நன்கு வெளிப்படுத்துகின்றது.

பௌத்த பேரினவாதம் காலத்திற்கு காலம மத ரீதியாக விடுக்கும் சவால்கள் இந்நாட்டின் ஐக்கியத்தினை சீர்குலைத்துள்ளதுடன், சிறுபான்மையினர் மத்தியில் அச்சத்தினையும் எதிர்கால இருப்புக் குறித்த கேள்வியினையும் எழுப்புகின்றது.

விசேடமாக அளுத்கம, தர்கா நகர் போன்ற முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களில் தற்சமயம் பொது பல சேனா என்ற பௌத்த பயங்கரவாத அமைப்பு மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் குறித்த பிரதேசங்களில் இயல்புநிலையினைப் பாதித்துள்ளதுடன், மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்வதற்கும் வழிவிட்டுள்ளது.

பள்ளிவாசல்கள், வியாபாரத் தளங்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களில் இதுவரை நான்கு பேர் பலியாகியுள்ளதுடன் 80 இற்கு மேற்பட்டோர் பாடுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவ்வசம்பாவிதங்கள் நிகழ்வதற்குக் காரணமான குறித்த அமைப்புக்கள் பொதுக் கூட்டம் மற்றும் ஊர்வலத்தை தர்கா நகரில் நடத்துவதற்கு பொலிசார் அனுமதியளித்தது அரசின் சட்ட ஒழுங்குச் செயன்முறையில் நம்பிக்கையீனத்தினை ஏற்படுத்தியுள்ளது.

போர் முடிந்து ஐந்து வருடங்கள் முடிவுற்ற நிலையில் இவ்வாறான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்கதாகும்.

இம் மனித உரிமை மீறல்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகச் செயற்படும் மனித உரிமை அமைப்புக்கள் கவனத்தில் எடுத்து இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்ந்து கொண்டிருக்கும் மனித அவலங்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் முஸ்லிம் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், ஊடகங்கள், கல்வியியலாளர்கள், சட்டவல்லுனர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என மனித உரிமைகளுக்கான கிழக்கு முஸ்லிம் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் வேண்டிக் கொள்கின்றது. (செ-11)


தூரிகை நுண்கலை வளாகம்

கேக் ஐசிங்



திருமண, பிறந்த நாள், நீராட்டுவிழா
சகல வைபவங்களுக்குமான ஐசிங்
அலங்கரிப்புக்கள்,பூக்கள் தயாரித்தல்
பலவகைக் கேக்குகளுடன்
றிச்கேக் தயாரிக்கும் முறைகள்
கொண்ட பயிற்சி வகுப்புக்கள்
**வெள்ளி, சனி** நாட்களில்
பி.ப.2.30 மணிக்கு நடைறுகின்றன

விரும்பிய நேரங்களில்
தனியாகவும் சிறு குழுவாகவும் பயில
விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்

மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 490 1358

(சி-7677)



**பசு மாடு ஏலவிற்பனை அறிவித்தல்**

அல்வாய் வடமேற்கு, கமக்காரர் அமைப்பினரால் கட்டாக்காலி மாடு ஒன்று இதுவரை உரிமை கோரப்படாத பட்சத்தில் எதிர்வரும் 19.06. 2014 அன்று காலை 10.30 மணியளவில் எமது சங்க அலுவலகத்தின் முன்றலில் ஏலவிற்பனை செய்யப்படும். 18.06. 2014 வரை உரிமையாளர்களுக்கு அவகாசம் வழங்கப்படும்.

கமக்காரர் அமைப்பு, அல்வாய் வட மேற்கு, அல்வாய்.
வட்ட விதானையார் முகவரி: தம்பியையா, மாறாம்புலம், அல்வாய் வட மேற்கு, அல்வாய். (C-7678)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசி வளர்ப்பு குறித்து பாசிக் நிறுவனம் விளக்கமளிப்பு

கடலட்டை மற்றும் கடல்பாசி வளர்ப்பு திட்டம் குடியிருப்பாளர்களின் தொழிலை பாதிக்காதவாறு மேலதிக வருமானமீட்டும் வகையிலேயே மேற்கொள்ளப்படும்.

இதனை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் மக்களின் வாழ்வாதார நிலை மேம்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு வட மாகாண சபை மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஊடாக ஆரம்ப மூலதனம் மற்றும் அனைத்து வகையிலுமான உதவிகளையும் பெற்றுத் தருவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.


மேற்படி திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நடைமுறைப்படுத்தல் தொடர்பாக நைக்டா மற்றும் பாசிக் நிறுவன பிரதிநிதிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

அதில் இப் பாசி வளர்ப்பு முறையில் இலகுவான முறையாக சிலிண்டர் முறை உள்ளதாகவும் இதனூடாக 45 நாட்களில் 180 கிராம உள்ளீட்டை பயன்படுத்தி 8 கிலோகிராம் வரை உற்பத்தி செய்ய முடியுமெனவும் உலர்த்தப்பட்ட பாசி கிலோ ஒன்று 45-50 ரூபா வரை விற்பனை செய்ய வாய்ப்புள்ளது. கேலிஸ் கம்பனி இதனை கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டுள்ளது.

உற்பத்திக்கான உள்ளீடுகளை வழங்கி



அவர்களே கொள்வனவு செய்வார்கள். தனிநபர் ஒருவர் முப்பதாயிரம் சதுர மீற்றரில் ஆயிரம் கூடுகளை அமைத்து பயிரிட்டால் 45 நாட்களில் குறைந்தது 33 ஆயிரம் ரூபா வரையில் வருமானமாக பெற்றுக் கொள்ள முடியும். இப் பாசி வளர்ப்பை கடும் வெப்பம் மற்றும் மழை வீழ்ச்சி தவிர்ந்த ஏனைய காரணிகள் பாதிக்காது. அத்தகைய சந்தர்ப்பத்தில் கூடுகளை நகர்த்தி பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

நோய்த்தாக்கம் மிக மிகக் குறைவு. அதனை பௌதீக முறையிலேயே இலகுவாக கட்டுப்படுத்த முடியும். இதற்கான சகல தொழில் நுட்ப உதவிகளும் வழங்கப்படும். இப்பிரதேசத்தில் கீயூமியா எனும் பெயரையுடைய கடற்பாசியே மிக பொருத்தமானதும் விளைச்சல் கூடியதாகவும் இருக்கும்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் வலைப்பாடு எனுமிடத்தில் இப் பாசி வளர்ப்பு 150 பயனாளிகளைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சாதகமான பயனடைந்துள்ளதாகவும் வேலணைப் பிரதேசத்தில் பரீட்சார்த்தய பயிரிடுதல் சில பயனாளிகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பொதுமக்கள் கருத்துக்கள் கோரப்பட்டது. அதில் கடற்றொழிலாளர் ஒருவர் கருத்துக் கூறுகையில்,

இப்பாசி வளர்ப்பினை நடைமுறைப்படுத்தும் போது தொழில் இழப்புக்கு வாய்ப்புள்ளதாகவும் அத்தகைய இழப்பை இப்பாசி வளர்ப்பு ஈடுசெய்யுமா எனவும் கேட்கப்பட்டது. இதற்கு நைக்டா பிரதிநிதி பதிலளிக்கையில்,

இத்திட்டம் ஏற்கனவே உள்ள கடற்றொழிலை நிறுத்தி மேற்கொள்ளப்படுவதில்லை. மேலதிக வருமானமீட்டும் வகையிலேயே செயற்படுத்தப்படும். இதற்கு 4 தொடக்கம் 6 அடி ஆழமான பகுதிகளிலேயே அது நடைமுறைப்படுகிறது. இத்தகைய இடத்தில் கடற்றொழிலாளர்கள் தொழிலை மேற்கொள்கிறார்களா எனவும் கேட்டுக் கொண்டார். இதற்கு கடற்றொழிலாளர் பிரதிநிதி கருத்துக் கூறுகையில்,

கரையோர கடல் பகுதி அனைத்துமே சுழற்சி முறையில் பயன்ப்டுத்தப்பட்டு வருவதாகவும் பாசி வளர்ப்பை மேற்கொள்ளும் போது இது பாதிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து ஆளுநர் கருத்துக் கூறுகையில்,

இத்திட்டமானது வழமையான தொழில் பாதிக்கப்படாமல் குடியிருப்பாளர்களின் மேலதிக வருமானமீட்டும் வகையிலேயே மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் பயனாளிகள் சார்பிலான சம்மதமும் உழைப்பும் தேவையெனவும் எதிரான சிந்தனைகளை விடுத்து நேராக சிந்தித்து முடிவெடுக்கும் படியும் இல்லாத பட்சத்தில் இத்திட்டம் வேறு மாவட்டத்துக்கு மாற்றலாக வாய்ப்புள்ளதெனவும் இருவார காலத்தினுள் இவ்விடயம் தொடர்பான அனைத்து தரப்பினரும் இணைந்து கலந்துரையாடி ஒருமித்த தீர்மானமான பிரதேச செயலர் ஊடாக தனக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் தேசிய மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு இதற்கான வசதிகளை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து இப் பாசி வளர்ப்பை மேற்கொள்ள தயாராகவுள்ளவர்கள் அதன் விபரத்தை கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்குமாறு கோரினார். (அ)

# வெடிபொருட்களை ஒப்படைக்கக்கோரி வடமராட்சியில் சுவரொட்டிகள்

(கரணவாய்)

அபாயகரமான வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் வைத்திருப்பது ஆபத்தானது என்று எழுதப்பட்ட சுவவெட்டிகள் வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவரொட்டியின் கீழ் பாதுகாப்பு படையினர் என அடிக்குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு சன்மானத் தொகைகளும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

துப்பாக்கிகளையோ அல்லது துப்பாக்கி உதிரிப்பாகங்கள் என்பனவற்றையோ வைத்திருப்பது சட்ட விரோதமாகும்.

அவ்வாறு எவரேனும் கண்டுபிடிக்கப்பட்டால் பிணையில் வரமுடியாது.

எனவே, நீங்கள் கண்டெடுத்த துப்பாக்கிகள் அல்லது ஏதேனும் ஆயுத உபகரணங்கள் அல்லது வெடி பொருட்கள் உங்களிடம் இருந்தால் அருகிலுள்ள பாதுகாப்பு படையினரது முகாமில் அல்லது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து அதற்குரிய வெகுமதிகளை பெற்றுக் கொள்ளுமாறும் அச்சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இதற்கான கொடுப்பனவுகளாக ரீ- 56 ரகத் துப்பாக்கி-5 ஆயிரம் ரூபா, கைத்துப்பாக்கி- 2 ஆயிரத்து 500 ரூபா, தற்கொலை அங்கி- 10 ஆயிரம் ரூபா, கொட்டான் துவக்கு- ஆயிரத்து 500 ரூபா, கவச எதிர்ப்பு கண்ணிவெடி- இரண்டாயிரத்து 500 ரூபா, கைக்குண்டு- ஆயிரம் ரூபா, ஆர்.பி.ஜி. உந்துகணை செலுத்தி- 5 ஆயிரம் ரூபா, ஆர்.பி.ஜி.. உந்துகணை- ஆயிரம் ரூபா , கிளைமோர் ரக கண்ணிவெடி- இரண்டாயிரத்து 500 ரூபா, கனரக துப்பாக்கி அல்லது இலகு இயந்திர துப்பாக்கி- இரண்டாயிரத்து 500 ரூபா , வெடி மருந்து- 5 ஆயிரம் ரூபா ஆகிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பாக வவுனியா- 077 96 37575, யாழ்ப்பாணம்- 011 3135680, கிளிநொச்சி- 076 6911617, முல்லைத்தீவு- 025 3895204 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-60)

## இராசி பலன்

17.06.2014

(ஆனி 03, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 10.43 மணிவரை

திருவோணம் முற்பகல் 7.47 மணிவரை

இராகுகாலம் 2.53-4.23 மணிவரை

சுபநேரம் 10.23-11.53 மணிவரை

வளவன்

**மேடம்** — தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** — சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேகநலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், அமைதிக் குறைவான நாள்.

**கடகம்** — நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முன்னேற்றம் கருதிய பயணமொன்று உருவாகலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்** — கடன் சுமை குறைய புதிய வழியை கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி** — பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சொத்து சம்பந்தப்பட்ட பிணக்குகள் சுமுகமாக முடியும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**துலாம்** — தாய்வழி உறவினரால் நன்மையுண்டு, மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலன் கருதிய சுப செலவுகளை மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்** — விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும், கௌரவமான நாள்.

**தனுசு** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மகரம்** — வியாபார நலன் கருதி புதிய நபர்களைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும், மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** — பணப் பற்றாக்குறையால் கடன் சொல்ல நேரிடலாம், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், செலவுகள் கூடும்.

**மீனம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் ச.ச.நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவு

(கரணவாய்)

கரணவாய் வடக்கு கம்பன் சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது என சமாசத்தின் செயலாளர்




கு.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.


இதற்கமைய தலைவராக வைகுந்தன், உப தலைவராக ம.ஞானமயூரன், செயலாளராக த.சுதன், உபசெயலாளராக கோ.பிரதாப், பொருளாளராக சி.ரஞ்சீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போசகராக த.தருமரட்ணம் தெரிவானார்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.சிவானந்தராஜா, க.நடனபாகம், பு.கமல்ராஜ், தே.தயாளினி, க.திருக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சனசமூக நிலையத்தின் விளையாட்டுக்கழக தலைவராக பா.ஜெயக்காந் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (2-60)

நன்றி-மிரர்




# வளலாயில் மீள்குடியேற்றக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு



வலி.கிழக்கு வளலாய் கிராம மக்களை வளலாயில் மீள்குடியமர்த்தக் கோரியும் வளலாயில் வேறு இடத்து மக்களை மீள்குடியமர்த்துவதை தடுக்கக் கோரியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வளலாய் மீனவர் சங்கத்தால் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம் மகஜர் கோப்பாய் பிரதேச செயலகத்தினூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் காணி இழப்புக்கு எதிரான போராட்டமொன்று கோப்பாய் பிரதேச செயலகத்தின் முன்னால் நேற்று காலை 8.30 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவிலேயே ஜனாதிபதிகு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வளலாய் என்ற கிராமத்தைச் சார்ந்த பொது மக்களாகிய எமது பணிவான விணணப்பம். மீன்பிடி மற்றும் விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாக கொண்ட மக்கள் பரம்பரையாக வாழும் கிராமம் இது.

நாட்டில் ஏற்பட்ட ஆயுதமோதல் காரணமாக ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக எமது கிராமத்தில் இருந்து நாம் வெளியேற்றப்பட்டோம்.

எமக்கு போவதற்கு இடம் இருக்கவில்லை. அகதி முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்களுடனும் காலம் கழித்தோம். விவசாயம் செய்ய நிலம் இருக்கவில்லை. மீன்பிடிக்க அனுமதி இருக்கவில்லை. பிள்ளைகள் படிக்க முடியவில்லை. ஒரு வேளை சாப்பாட்டிற்கே அல்லறப்பட்டோம்.

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடகாலம் முடிவடைந்த பின்னரும் கூட இன்றும் அதே நிலையில்தான் வாழ்ந்து வருகின்றோம்.

வளவாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு முழுமையானதாகவும் வளலாய் மேற்கின் ஒரு பகுதியும் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. 272 குடும்பங்களைச் சார்ந்த 920 மக்கள இங்கு மீளக்குடியேற வேண்டியுள்ளது. இதில் 224 குடும்பத்தினருக்கு இங்கு காணி உள்ளது. 48 குடும்பத்தவர் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த காணியற்றோராக இருக்கின்றார்கள். இந்த 272 குடுமபங்களுக்கு 234 ஏக்கர் காணி மாத்திரமே சொத்தாக உள்ளது.

ஆனால் இக்காணியும் கூட இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டு விட்டதாக முன்னர் கூறப்பட்டது. இதன் உண்மைத்தன்மை பற்றி நாம அறிந்திருக்கவில்லை. இப்பொழுது இக்காணிகளை வலிகாமம் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டோரில் ஒரு பகுதியினருக்கு கொடுக்க இருப்பதாக நாங்கள் அறிகின்றோம்.

கடந்த 25 வருடங்களாக அகதிகளா இருப்பிடமின்றி வீதிகளில் அலைகின்றோம். அந்நிலத்தின் உடைமையாளராகிய நாம் இருப்பிடமின்றி அலையும் போது எமது வீடுகளையும் காணிகளையும் இராணுவம் சுவீகரிப்பதோ அல்லது அவற்றை வேறு நபர்களுக்கு கையளிப்பதோ ஏறத்தாழ ஆயிரம் மக்களுக்கு விளைவிக்கும் பாரிய அநீதி மட்டுமன்றி மோசமான மனித உரிமை மற்றும் அடிப்படை உரிமை மீறலுமாகும். இடம் பெயர்ந்தோர் அனைவரும் தமது சொந்த காணிகளுக்கு செல்வதனூடாகவே அவர்கள் தமது வாழ்வாதாரங்களை ஏற்படுத்த முடியும் என்பதுடன் ஒவ்வொரு குடும்பமும் தனது எதிர்காலத்தை திட்டமிடவும் முடியும்.

எனவே எமது காணிளை இராணுவ தேவைக்காக தாங்கள் கையகப்படுத்துவதையோ அல்லது அவற்றை வேறு நபர்களுக்கு பிரித்து வழங்குவதையோ நாம் உறுதியாக நிராகரிக்கின்றோம்.

எனவே தங்களுக்கு இருக்கும் நிறைவேற்றதிகாரத்தை பயன்படுததி எமது காணிகளுக்கு நாம் மீண்டும் செல்வதற்கு தடையாக உள்ள காரணிகளை நீக்கி எம்மை எமது காணிகளுக்கு அனுப்பும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விடுமாறு கனதத இதயத்துடன்வேண்டிக் கொளகிறோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்-ஆடியபாதம் வீதி அருள் மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழ்மை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இரதோற்சவமும் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.,

திருவிழாக்காலங்களில் தினமும் காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி உலாவும் மாலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதி உலா வரும் காட்சியும் இடம் பெறும். (2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீராவியடி கடையிற்சுவாமி ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்திய நாதன் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 20 அம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும்.

அன்றைய தினம் 1008 சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். மறு நாள் சனிக்கிழமை தொடக்கம் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஜீலை மாதம் முதலாம் திகதி 108 சங்காபிஷேகமும் மாலைதிருக்கல்யாணம் நடைபெற்று மின்சார தீபங்களாஸ் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் சுவாமி வலம் வரும் காட்சி இடம்பெறவுள்ளதாக ஆலய சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## பஜனை பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையில் 100 பஜனைப் பாடசாலைத் திட்டம் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளரின் 100 பஜனைப்பாடசாலை திட்டம் கடந்த 6 ஆம் திகதி வலி.மேற்கில் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் கோவிலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ் வில் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை அதிபர் கலந்து கொண் டார் இந் நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மாணவர்க ளுக்கான அற நெறி நூல்களை வழங்கி மாணவர்களை ஊக்கு வித்தார்.

இதனைத் தொடர்ந்து சங்கானைப் பகுதியிலுள்ள நிகரை வைரவர் ஆலயத்திலும் இவ் பஜனைப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதே தினத்தில் வட்டுகிழக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள துரட்டிப்பனை முத்துமாரி அம்பாள் ஆலயத்திலும் பஜனைப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வுக ளில் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச சபைத்தவிசாளர் மாணவர் களுக்கு அறநெறி நூல்களை வழங்கி நிக ழ்வை ஆரம்பித்து வைத்தார். (2-4)

# எள்ளங்குளம் மயானம் மக்கள் நிதி பங்களிப்பில் புனரமைக்கப்படும்

(கரணவாய்)

உடுப்பிட்டி நவிண்டில் பகுதியில் உள்ள எள்ளங்குளம் மயானத்தின் அபிவிருத்தி வேலைகள் அப்பிரதேச மக்களால் முன்னெடுக்கப்படவுள்ளதாக மயான நிர்வாகத்தின் தலைவர் ம.குலேந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த அபிவிருத்தி வேலைகளுக்காக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி திரட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய அப் பிர்தேசத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தில் இருந்து ஆயிரம் ரூபா வீதம் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட்மராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு கீழுள்ள குறித்த மயானம் கடந்த 20 வருட காலமாக எந்தவொரு அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளமை தொடர்பில் அப்பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த மயானம் கடந்த யுத்த காலத்தின் போது சேதமடைந்தது.

ஆனால், இதுவரை காலமும் சேதமடைந்த மயானத்திற்கு எந்த வித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக மயான நிர்வாகம், பொது அமைப்புக்கள் மற்றும் பொது பொதுமக்களால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைகளி இரு தடவைகள் கோரிக்கை விடப்பட்டது. ஆனால், கடந்த 6 மாதங்களுக்கு மேல் பிரதேச சபையால் எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் பொதுமக்களின் நன்மை கருதி மயான நிர்வாகத்தினால் பொது மக்களிடம் இருந்து நிதிகோரப்பட்டு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் துரோகி விமல் என்று வடக்கு முதலமைச்சர் கூறி விட்டாரே

## யாழில் புலம்பிய அமைச்சர் விமல்

(யாழ்ப்பாணம்)

நான் இனவாதியில்லை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழுள்ள இந்த அரசாங்கமும் இனவாத அரசாங்கமில்லை. இந்நிலையில் தமிழ் மக்களுக்கு எதிரானவன் துரோகி என என்னை வடமாகாண சபை முதலமைச்சர் கூறியுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது என நிர்மாணத் துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச யாழ்ப்பாணத்தில் வைத்து கவலையுடன் தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணம் குருநகரில் புனரமைக்கப்பட்ட 5 மாடி வீட்டு தொகுதி கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த வீடுகையளிப்பு நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தோம். இது எந்தவிதமான அரசியல் வேறுபாடுமின்றி மக்களின் நன்மைக்காக செய்யப்படுகின்ற காரியம் என்பதால் அவர் கலந்து கொள்வார் என எதிர்பார்த்தோம்.

அதுமட்டுமின்றி இந்த நிகழ்வின் போது திறந்து வைக்கப்பட்ட நினைவுக்கல்லிலும் அவருடைய பெயரையும் பொறித்துள்ளோம். அவரது பெயரினை நினைவுக்கல்லில் பொறிக்க அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவும் ஒப்புக்கொண்டிருந்தார்.

நாங்கள் அரசியல் வேறுபாடுகள், பேதங்களை எல்லா விடயங்களிலும் சிந்திக்கவில்லை. அவ்வாறு பேதங்களை மட்டுமே நாங்கள் தொடர்ந்து சிந்தித்து வந்தால் வெகு விரைவில் அழிந்து விடுவோம்.



இந் நிகழ்விலே முதலமைச்சர் கலந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு துரோகம் விளைவிக்கின்ற வகையில் விமல் வீரவன்ச பேசுகின்ற காரணத்தால் இந்த நிகழ்வில் தாமும் கலந்து கொண்டால் தன்னையும் தமிழ் மக்கள் துரோகம் இழைத்தவர்களாக பார்ப்பார்கள் என்ற காரணத்தால் தான் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்று ஒரு இணையத் தளத்திற்கு அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இடிந்து போன குடிமனையில் இருந்தவர்கள் யார்? தமிழ் மக்களின் துரோகி என்று முதலமைச்சர் சொல்கின்ற இந்த துரோகி அவர்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்றால் 110 மில்லியன் ரூபாயை பெற்று 160 குடும்பங்களுக்கு உதவியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு உதவுகின்றவர்கள் தான் தமிழ் மக்களுக்கு துரோகி என்றால் இப்படி எத்தனை பேர் வேண்டுமானாலும் தமிழ் மக்களுக்கு துரோகிகளாக இருக்கலாம்.

எங்களை பார்த்து துரோகி என்பவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன செய்துள்ளார்கள்? அவர்கள் தமிழ் மக்களின் பொது தேவைக்காக எவ்வளவு செலவு செய்திருக்கின்றார்கள் .

தமிழ் மக்களுக்கு பொது வசதியைப் பெற்று தருவதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை. தமிழ் மக்கள் எப்போதுமே பிரச்சினைக்குள்இருக்க வேண்டும். அதற்கு காரணம் இந்த சிங்கள அரசாங்கம் தான். அதனை நாங்கள் மாற்றி அமைக்க வேண்டும் அதற்கு நாங்கள் போராட வேண்டும் என மீண்டும் அந்த அப்பாவி மக்களை பலிகடா ஆக்க தான் முயற்சிக்கின்றார்கள்.

அந்த இருண்ட யுகத்தை மீண்டும் மீண்டும் பேசுவதன் மூலம் எனக்கும் உங்களுக்கும் கிடைக்க கூடிய நன்மை தான் என்ன ? அந்த இருள் சூழ்ந்த அந்த காலத்தை மீண்டும் மீண்டும் எடுத்து காட்டி மீண்டும் உங்கள் பிள்ளைகளை அந்த காலத்திற்கு கொண்டு செல்வதா? இல்லை அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்து கொடுப்பதா? என்பதே உங்கள் முன் உள்ள கேள்வி.

நாங்கள் இனவாத அரசியல்வாதியாக இருந்தால் இந்த குருநகரில் வீட்டு தொகுதியை புனரமைக்காமல் கொழும்பில் உள்ள வீட்டுத் தொகுதியை புனரமைத்து இருபபோம் என்றும் தான் இனவாதியில்லை என்றும் இந்த அரசாங்கம் இனவாத அரசாங்கமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# அரசிலிருந்து விலகுவது குறித்து உடன் தீர்மானம்

## அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைச்சராக இருப்பது குறித்து தான் வெட்கப்படுவதாகவும், தனது மக்களை தன்னால் பாதுகாக்க முடியாது போயுள்ளதாகவும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அரசாங்கத்தில் இருந்து விலகுவது குறித்து உடனடியான தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 80க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஆபத்தான நிலையில் இருக்கும் மூன்று பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (2)

## அமெரிக்காவை நெருங்க

# சட்ட ஆலோசகரை நாடுகிறது இலங்கை

(கொழும்பு)

அமெரிக்காவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ள நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு அழுத்தங்களை கொடுக்கக் கூடிய பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரசாங்கம் பாகிஸ்தான் சட்ட ஆலோசகர் ஒருவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் சிரேஷ்ட சட்ட ஆலோசகரான கலாநிதி மொஹமட் அசாம் சௌதிரியிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இராஜதந்திர துறையில் பிரபலமான சட்ட ஆலோசகரான சௌதிரியிடம் இலங்கை தொடர்பாக ஐ.நா மனிதவுரிமை ஆணைக் குழுவில் மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச விசாரணை சம்பந்தமான ஆலோசனைகளை பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மொஹமட் அசாம் சௌதிரி, கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் இந்த விடயம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்புகளில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய சௌதிரி தனது பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த பணிகளின் முன்னேற்றம் குறித்து அடுத்த வாரம் அமைச்சர் பீரிஸுக்கு அவர் அறிவிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்தரப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 29.5 செவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: ACCA, Banking Diploma / வங்கியாளர்
தொ.இ: B/3277

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 34.25 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Hardware & Network Engineering / தொழில்நுட்பவியலாளர்
தொ.இ: B/3278

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 24.25
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L / நடன ஆசிரியர்
எதிர்பார்ப்பு: நடன ஆசிரியர்
தொ.இ: B/3280

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 32 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L / வியாபாரம்
தொ.இ: B/3281

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 67 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA / ஆசிரியர்
தொ.இ: G/2088

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 19 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2093

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 47
உயரம்: 161 cm
தகைமை/தொழில்: AAT
தொ.இ: G/2095

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 14 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2097

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலைப் பெண் கொலை வழக்கு; கைதான சந்தேகநபர்களுக்கு பிணை

யாழ். சுதுமலை வடக்கில் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டு தங்கநகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 சந்தேக நபர்களில், 5 பேரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான சரீரப்பிணையில் விடுவி க்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தியபோதே இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், 5 பேரை கடந்த சனிக்கிழமை பகல் கைது செய்திருந்தனர். மேலும் ஒருவரை அன்றையதினம் இரவு கைது செய்திருந்தனர்.


சனிக்கிழமை பகல் கைது செய்யப்பட்ட 5 பேரே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மேலும் இருவரை கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை கைதுசெய்ததாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் கைதுசெய்யப்பட்ட இம் மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

குமாரலிங்கம் பத்மாவதி (வயது-56) என்ற இப்பெண் கொழும்பில் வசித்துவந்த நிலையில், சுதுமலை அம்மன் கோவில் திருவிழாவுக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்து, சுதுமலை வடக்கிலுள்ள தனது வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் பெண்ணொருவருடன் தங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோவில் திருவிழா முடிந்து வந்து வீட்டில் இவர்கள் இருவரும் உறங்கிக்கொண்டிருந்தனர். இதன்போது, சனிக்கிழமை அதிகாலை வீட்டுக் கூரையை பிரித்து உள்நுழைந்த கொள்ளையர்கள் இவர்கள் இருவரின் கை, கால் மற்றும் வாயைக் கட்டி விட்டு அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் வீட்டிலிருந்த நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதன்போது, குமாரலிங்கம் பத்மாவதி (வயது 56) என்பவரின் வாயை துணியால் கட்டியமையால் அவர் மூச்சுத் திணறி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)



இலங்கை வங்கி இளைஞர் சேமிப்பு கணக்கினைப் பேணி வந்த வேதநாயகம் மேனன் தம்பதியினருக்கு இலங்கை வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையினால் தங்க நாணயப் பரிசினை கிளையின் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் ரி.ஸ்ரீகந்தராசா வழங்குவதை படத்தில் காணலாம்.

# மெய்வல்லுநர் விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மை போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் என முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வின் விருந்தினர்களாக திருமதி பத்மலோஜினி சந்திரபாலன் (ஜே.பி), வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தம்பிராசா திருநாவுக்கரசு, பொன்னையா சிதம்பரநாதன், ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் கனகசபாபதி கனக நாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 250 | 300 |
| தக்காளி | 200 | 180 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 40 | 50 | 60 |
| கோவா | 140 | 130 | 110 | 160 |
| கரட் | 200 | 160 | 190 | 200 |
| பூசணி | 70 | 70 | 70 | 70 |
| புடோல் | 70 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 140 | 170 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 | 100 |
| லீக்ஸ் | 70 | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 110 | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 160 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 150-200 | 300 | — | 250 |
| போஞ்சி | 140 | 180 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30 | 20-30 |
| இராசவள்ளி | 90 | 120 | — | 100 |


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 47

கோபல் துவா

கடவுளைப் பார்க்க கோவிலுக்கு வருகிறான் ஒருவன் ...
கோவிலுக்கு வருபவனை கடவுளாய் பார்க்கிறான் இன்னொருவன்...!!!



நிரோஜன் தம்பிராசா




சாரு நிஷா


மன்னர்கள் ஏன் குளங்களை கட்டினார்கள்? மரங்களை நட்டார்கள்?



குளங்கள் பெண்கள் குளிக்க, மரம் பின்னால் இருந்து எட்டிப் பார்க்க.

அன்புக்கு நான் அடிமை

100ல் போய் 110ல் வருவதை விட
40ல் போய் நலமாய் திரும்புவது
நன்று




க்ர்ர்த்தி கார்த்திகேசு

மற்றவனுடன் உன்னை ஒப்பிட்டு பார்க்காதே
அவன் வேறு நோக்கத்திற்காக பிறந்திருக்கிறான்.
நீ வேறு நோக்கத்திற்காக பிறந்திருக்கிறாய்
இரண்டு மனிதர்களை ஒரு நோக்கத்திற்காக படைக்க கடவுள் முட்டாள் இல்லை.

கபில் கபிலன்



மகள்: அப்பா...நான் சாதிக்க விரும்புறேன்.
அப்பா: Very Good பொண்ணுங்க இப்படித்தான் இருக்கணும். எந்தத் துறையில சாதிக்கப் போற.
மகள்: ஐயோ அப்பா..., நான் எதிர் வீட்டுப் பையன் "சாதிக்" ஐ விரும்புறேன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் நாட்டுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துடன் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுவதற்கு இது உரிய தருணமல்ல. இவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நாட்டுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அபாயம் கொண்டதென ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்ட நாள் முதல் இன்றுவரையில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டிலிருந்து கடுகளவும் விலகவில்லை.

சர்வதேச அச்சுறுத்தலென்பது தேசிய ரீதியான பிரச்சினையாகும். இதனை இராஜதந்திரரீதியாக அணுக வேண்டுமென்தே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு.

இதற்காகவே அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்திற்கூடாக சர்வதேச விசாரணையை தடுத்து நிறுத்துவதற்கான பிரேரணையை கொண்டுவந்துள்ளோம்.

இப்பிரேரணையை பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்ற முடிவு செய்தோம் எனவும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஏதேனும் தீர்மானத்தினை சுயமாக முன்வைத்தால், அவர் எதேச்சதிகாரத்துடன் செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ் சுமத்துகின்றனர்.

பாராளுமன்றத்திற்கூடாக தீர்மானத்தை நிறைவேற்ற ஜனாதிபதி முனையும் பட்சத்தில் அது வேலைக்காகாதது என தட்டிக்கழிக்கப் பார்க்கின்றனர்.

அரசாங்கத்துடன் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு வரும் எதிர்க்கட்சியினரின் இலக்குதான் என்ன? அவர்கள் எதனை நிறைவேற்றுவதற்காக இத்தனை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

நாட்டை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் எதிர்க்கட்சியினர் சந்தர்ப்பம் பார்த்து தேசிய பிரச்சினையுடன் உள்நாட்டு அரசியல் நடத்துகின்றனர்.

இவ்வாறு செயற்படுவது ஏன் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்பது அவசியமாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்ட போதே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளையின் தீர்மானம் பக்கச் சார்பானது. நியாயமற்றது எனத் தெளிவாக விளக்கி கூறியிருந்தார். அதே நிலைப்பாட்டில் தான், அர சாங்கம் இன்னமும் உள்ளது.

நியாயமில்லாத விசாரணைக் குழுவினை எதற்காக இலங்கைக்குள் அனுமதிக்க வேணடும். அவர்களது அறிக்கையில் எந்தவொரு உண்மைத் தகவலும் இருக்காது என்பதை தெரிந்தே நாம் அவர்களது வருகையை ஆட்சேபிக்கின்றோம்.

ஆனால் அரசாங்கத்துடன் ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டு வரும் எதிரக்கட்சியினர் எதற்காக இந்த விசாரணைக்குழுவின் வருகையை ஆதரிக்க முற்ப டுகின்றனர்.

இதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்த வேண்டியது அவர களது கட்டாய பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார். (2)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜைகள் கைது

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் பிரஜைகளை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்று தருவதாக கூறி தரகர்கள், பெருமளவிலான பாகிஸ்தானியர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துள்ளனர்.

வருடக்கணக்கில் இவர்களை இலங்கையில் தங்க வைத்து சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய இரகசியமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதால், திணைக்களம் இந்த விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறு பல வருடங்கள் தங்கியிருந்த 102 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டு, பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்துள்ள பாகிஸ்தான் பிரஜைகள் இரவு நேரத்தில் குறைந்த கூலிக்கு தொழில் புரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் ஆயிரத்து 900 பாகிஸ்தானியர்கள் தம்மை அகதிகளாக பதிவு செய்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (2)

# போலி நாணயத்தாள்; மக்களே அவதானம்

போலி நாணயத்தாள்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென பொலிஸார் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

அலுத்கம, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளது.

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அலுத்கம எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில நேற்று முன்தினம் அதிகாலை 5 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து 500 ரூபாவிற்கு எரிபொருள் நிரப்ப மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் முயற்சித்துள்ளார்.

போலி நாணயத்தாள் பற்றி எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் குறிப்பிட்டதனை அடுத்து குறித்த நபர், தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளில் எவரும் அக்கறை கொள்வதில்லை

## அமைச்சர் குமார வெல்கம கவலை

அரசியல்வாதி ஒருவர் ஓய்வு பெற்று விட்டால், ஓய்வுபெற்ற பொலிசாரை போல் அவரை எவரும் கண்டுகொள்வதில்லை என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் வாராந்த சந்தை கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வுபெறும் முன்னர் தமது கிராமம் மற்றும் நாட்டுக்கு தேவையான வேலைகளை செய்து முடிக்க வேண்டும்.

சிறந்த பணிகளை செய்தால் மக்கள் மகிழ்ச்சியடைவது மட்டுமல்லாது சிறந்த பணிகளை செய்தோம் என்ற மன ஆறுதலுடன் மரணிக்கலாம்.

தொடர்ந்தும் எம்மால் அரசியலில் நீடித்து இருக்க முடியாது. புதிய தலைமுறைகளுக்கு ஏற்ற வகையிலும் புதிய தொழில் நுட்பங்களுக்கு ஈடாகவும் புதியவைகளை நாம் செய்ய வேண்டும் என்வும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி மாசிலாமணி தவநிதி

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி தவநிதி இறைபதம் அடைந்து விட்டாார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு வன்னியசிங்கம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### வல்லிபுரம் கந்தசாமி



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தசாமி (முன்னாள் காசாளர்–யாழ்.பல.நோ.கூட்டுறவுச் சங்கம்) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 241, ஆஸ்பத்திரி வீதி, பீரிஸ் மலர்ச்சாலை களுபோவல–கொழும்பில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி அருளானந்தம் யேற்றூட்

இளவாலைப் போயிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் யேற்றூட் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு இளவாலை லூர்து அன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### சிறீஸ்கந்தராஜா கஜன்



சிறீஸ்கந்தராஜா கஜன் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நேற்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலமுப் பாட்டியும் அழைப்பு மணியும்



கோகுல் சற்று தூரத்தில் நின்றபடி அலமுப் பாட்டியின் வீட்டைக் கவனித்தான்.

பாட்டியின் வீட்டுக் கதவு மூடி இருந்தது. இதுதான் சரியான நேரம் என்று மெதுவாகக் கதவு அருகே சென்றான்.

சுற்றிலும் பார்த்துவிட்டு வீட்டு அழைப்பு மணியை அழுத்திவிட்டு, ஓடிச்சென்று ஒரு மரத்தின் பின்னால் பதுங்கினான். அங்கே இருந்தபடியே கவனித்தான்.

சற்று நேரத்தில் அலமுப் பாட்டி வந்து கதவைத் திறந்தார். , வாசலில் யாரையும் காணாததால், இடப்புறமும் வலப்புறமும் திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார். அதைப் பார்த்த கோகுல் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

விடுமுறை நாட்களிலோ அல்லது பள்ளிவிட்டு வந்த பிறகோ, கோகுல் அக்கம் பக்கத்து வீடுகளில் அடிக்கடி செய்யும் குறும்பு இது. யார் வீட்டு அழைப்பு மணியையாவது அழுத்துவான்.

அவர்கள் கதவைத் திறக்கும் முன் ஒளிந்துகொள்வான். கதவைத் திறப்பவர்கள் யாரையும் காணாமல் ஏமாறுவதில் கோகுலுக்குக் குதூகலம்.

அலமுப் பாட்டிக்கு 70 வயதுக்கு மேலே இருக்கும். அவருக்கு ஒரு கால் சரி இல்லை.

சில வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தினால், சற்றே சாய்ந்து சாய்ந்துதான் நடப்பார். கைத்தடியுடன் சர்லையில் அவர் நடந்து செல்லும்போது பார்க்கப் பாவமாக இருக்கும்.

கோகுல் பலமுறை நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு பாட்டியைக் கிண்டல் செய்திருக்கிறான். இப்படி வீட்டு அழைப்பு மணியை அழுத்துவதுகூட நண்பன் மகேஷ் சொல்லிக் கொடுத்ததுதான்.

சில தினங்களுக்குப் பிறகு...

வழக்கம்போல அலமுப் பாட்டியின் வீட்டை நோட்டம்விட்டான் கோகுல். கதவு மூடி இருந்தது. வேகமாகச் சென்று அழைப்பு மணியை அழுத்திவிட்டு, மரத்தின் பின்னால் மறைந்துகொண்டான். சற்று நேரத்தில் அலமுப் பாட்டி கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்துவிட்டு, உள்ளே சென்றுவிட்டார்.

இன்றும் தன்னைப் பாட்டி பார்க்கவில்லை என்று நினைத்தான். ஆனால், கோகுல் அழைப்பு மணியை அழுத்த வரும்போதே, பாட்டி ஜன்னல் அருகில் நின்று பார்த்துவிட்டார்.

அரை மணி நேரம் கழிந்தது. கோகுல்! கோகுல்! என்று அழைத்துக்கொண்டே அவனது வீட்டுக்குள் வந்தார் அலமுப் பாட்டி.

பாட்டியின் குரலைக் கேட்டதும் மனம் பக்பக் என்று அடித்துக்கொண்டது.

குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கத்தானே செய்யும்?

அவன் ஓடிச்சென்று படுக்கை அறையில் ஒளிந்து கொண்டான்.

பாட்டியுடன் அம்மா பேசுவது கேட்டது.

வாங்கம்மா! என்ன விடயம்?

கோகுல் என் வீட்டுக்கு வந்து இருந்தான்போல, காலிங்பெல்லை அடிச்சான்.

நான் கதவைத் திறக்கிறதுக்குள்ளே வந்துட்டான்.

அதுதான் அவனைப் பார்க்க வந்தேன் என்றார் பாட்டி.

கோகுல்... கோகுல் என்று அம்மா அழைத்தார்.

அதற்கு மேலும் ஒளிய முடியாமல் வெளியே வந்தான் கோகுல்.

பாட்டி வீட்டுக்குப் போனியாமே எதுக்கு? என்று அம்மா கேட்டார்.

திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல, பதில் சொல்லத் தெரியாமல் விழித்தபடி நின்றான் கோகுல்.

அப்போது அலமுப் பாட்டி, முன்னாடி எல்லாம் நான் கோகுலுக்கு அடிக்கடி சாக்லேட் வாங்கித் தருவேன். அந்த உரிமையில் இப்போதும் சாக்லேட் கேட்க வந்திருப்பான். அது தானே கோகுல்? இதோ வாங்கி வந்திருக்கேன் என்று சிரித்தபடியே தன் கையிலிருந்த சாக்லேட் ஒன்றை கோகுலிடம் கொடுத்தார்.

கோகுல் தயங்கித் தயங்கி வாங்கிக்கொண்டான்.

தான் செய்த தவறை அம்மாவிடம் சொல்லாதது மட்டுமின்றி சாக்லேட் வாங்கி வந்த பாட்டியைத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

உன்னை மாதிரி பசங்க இந்தப் பாட்டியை நினைவில் வைத்து வீட்டுக்கு வர்றது ரொம்ப சந்தோஷம்.

இனிமே நான் வந்து கதவைத் திறக்கும் வரை காத்திருக்கணும். அப்போதுதான் சாக்லேட் தரமுடியும் என்று சிரித்தபடியே சொல்லிவிட்டுச் சென்றார்.

இப்போது எல்லாம் கோகுல் விடுமுறை நாட்களில் தன் நண்பர்களுடன் அலமுப் பாட்டி வீட்டின் அழைப்புமணியை அழுத்துகிறான்.

ஆனால்.ஓடி ஒளிவது இல்லை.

பாட்டியுடன் வீட்டு வேலைகளில் சின்னச் சின்ன உதவிகள் செய்கிறான்.

பாட்டியும் அவர்களுக்குக் கை நிறைய இனிப்புகளை வழங்கி அனுப்பி வைக்கிறார்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

06.2014
17

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1579 - சேர் பிரான்சிஸ் டிறேக் "நோவா அல்பியன்" (கலிபோர்னியா) என்ற நாட்டை இங்கிலாந்துக்காக உரிமை கோரினார்.
- 1631 - மொகலாய மன்னன் ஷாஜகானின் மனைவி மும்தாஜ் மஹால் தனது 14 ஆவது மகப்பேறின போது காலமானாள்.
- 1839 - ஹவாய் பேரரசில் கத்தோலிக்கர் தமது சமயத்தை வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.
- 1885 - விடுதலைச் சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது.
- 1911 - செங்கோட்டை வாஞ்சிநாதன் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுக் கொண்டான்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜேர்மனி கைப்பற்றியதை அடுத்து நட்பு நாடுகளின் படைகள் பிரான்சை விட்டு விலகத் தொடங்கின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் லிபியாவில் கப்பூசோ துறைமுகத்தை இத்தாலியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1940 - எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய பால்ட்டிக் நாடுகளை சோவியத் ஒன்றியம் கைப்பற்றியது.
- 1944 - ஐஸ்லாந்து டென்மார்க்கிடம் இருந்து விடுதலை அடைந்து குடியரசாகியது.
- 1944 - பிரெஞ்சுப் படைகள் எல்பா தீவை ஜேர்மனியிடம் இருந்து விடுவித்தனர்.
- 1954 - குவாத்தமாலாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1987 - மாலைநேர கடல் குருவியினத்தின் கடைசிக் குருவி இறந்ததில் அவ்வினம் முற்றாக அழிந்தது.

### பிறப்புகள்

- 1703 - ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை ஆரம்பித்தவர் (இ. 1791)
- 1942 - மொகம்மது எல்பரதேய், பன்னாட்டு அணுசக்தி அமைப்பின் தலைமை இயக்குனர். நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள

- **1858 - ராணி லட்சுமிபாய் (ஜான்சிராணி), இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை (பி. 1835)**
- 1911 - வாஞ்சிநாதன், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1886)
- 2001 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1919)

### ஜான்சி ராணி லட்சுமிபாய்



மணிகர்ணிகா எனும் இயற்பெயருடன் 1835 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் 1857 இல் இந்தியக் கிளர்ச்சியில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தவர்களில் முன்னோடியாகக் கணிக்கப்படுகின்றார்.

1842 இல் ஜான்சி மகாராஜா கங்காதரராவ் நிவல்கரைத் திருமணம் செய்தார். 1853 நவம்பர் 21 இல் ராஜா மறைந்ததன் பின் இவரே ஜான்சியை ஆட்சி செய்தார். பல தடவைகள் ஆங்கிலேயர்கள் ஜான்சியை முற்றுகையிட்டபோதும் அவர்களால் ஜான்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எனினும் 1858 ஏப்ரல் 4 ஆம் திகதி கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆங்கிலேயர் ஜான்சிக் கோட்டையைக் கைப்பற்றினர். இதன்போது மகனுடன் கோட்டை மதிலிலிருந்து பாய்ந்து தப்பித்த ராணி குவாலியரின் கோட்டை ஒன்றை கைப்பற்றிக் கொண்டார்.

1858 ஆம் ஆண்டு ஜுன் 17 ஆம் திகதி வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட ஜான்சி ராணி வீர மரணமடைந்தார். இவர் அனைத்துப் புரட்சித் தலைவர்களிலும் மிகவும் ஆபத்தானவர் எனவும் வீரம், விவேகம், விடாமுயற்சி என்பவற்றுக்கு குறிப்பிடத்தக்கவர் எனவும் ஆங்கிலேயர்களால் புகழப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



72

.....•அடங்காத கல்வி ஆர்வலர் அவர்.

பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு இருபத்தைந்து லட்ச ரூபாய் எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

அதில் முக்கியமான செய்தி- அது முதல் தவணை என்பது.

•துணிச்சல்காரர்; உண்மைகளைப் போட்டு உடைக்க நினைப்பவர்.

ஹிந்தி எதிர்ப்புத் தீ எரிந்து கொண் டிருந்த வேளையில் இவர் காங்கிரஸ் எம்.எல்.ஏ.

இருந்தும் ஹிந்தி எதிர்ப்பு என்பது கட்சிகளின் போராட்டமல்ல; மக்களின் போராட்டம்; இதை மறந்துவிடக் கூடாது என்று சட்டமன்றத்தில் சரியாய்ச் சொன்னார்.

ஒருநாள் அவரை என் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தேன்.

ஒரு முனிவரைப் போல் சாப்பிட்டார்.

தட்டில் ஒரு முழு ஆப்பிள் இருந்தது.

ஒரு கத்தி கேட்டார். வைத்த கையும் எடுக்காமல், அந்த ஆப்பிள் தோலும் அறுந்து போகாமல், உருட்டி உருட்டி ஒரே சீவலாய்ச் சீவித் தோல் சுருளை மட்டும் தனியே வைத்தார்.

அசந்து போனேன்.

அவர் நூல்களுக்குள் அற்புதமான செய்திகளையெல்லாம் அங்கங்கே பதியம் போடுவார்.

"தன் வாழ்க்கையின் பிற்காலத்தில் லெனின் கூட சைவர்" என்பார்.

"ராவணன் ஆண்ட இலங்கை இன்றைய இலங்கை இல்லை; இன்றைய இலங்கைக்குத் தென்மேற்கே எண்ணூறு மைல் தூரத்தில் இருந்தது" என்பார்.



பொள்ளாச்சி நா.மகாலிங்கம்

•தன்னுடைய மூலதனங்கள் எல்லாம் கிராமப் பொருளாதாரத்தையே பெரிதும் சார்ந்திருக்க வேண்டுமென்பதில் எப்போதும் கவனமாயிருக்கிறார்.

•உலகமே சைவமாக வேண்டும்; அமெரிக்கப் பொருளாதாரத்தை ஜப்பான் கைப்பற்றியது மாதிரி உலகப் பொருளாதாரத்தை இந்தியா கைப்பற்ற வேண்டும் என்பவை அந்த மாமனிதரின் மகாக்கனவுகள்.

•அவரது ஓம் சக்தி பத்திரிகை ஒரு யாகம்; பத்திரிகை உலகில் ஒரு தியாகம். பல நேரங்களில் அதில் இடம்பெறும் கட்டுரைகள் காகிதங்களைச் செப்பேடுகளாக்கி விடுகின்றன.

என்னுடைய பதினெட்டாவது வயதிலிருந்து அவரை நான் அறிவேன்.

அவரோடு பழகுவதையும் பேசுவதையும் ஒரு பண்பாட்டுப் பயிற்சியாகவே நான் மதிக்கிறேன்.

உடல் காக்கும் முறை பற்றி அவரிடம் நான் அதிகம் அறிந்திருக்கிறேன்.

ஒரு பெரிய இருதய மாற்று அறுவை கிசிச்சைக்குப் பிறகும் இன்று புதிதாய்ப் பிறந்தேன் என்று இளமை நலத்தோடு அவர் சந்தோஷக் காற்றாய் சஞ்சரித்து வருகிறார்.

உடம்பையே ஓர் உருக்குத் தொழிற்சாலையாய் வைத்திருக்கிறார்.

ஊருக்கெல்லாம் சர்க்கரை தருகிற அவருக்கு உடம்பில் சர்க்கரையில்லை.

அவர் மீது நான் அன்பு பாராட்டுவதற்கு ஓர் அழகான காரணம் உண்டு.

அவரது இராமலிங்கர் பணிமன்றத்தின் கவியரங்கில் நான் கலந்து கொண்டபோதுதான் சபையில் முதன்முதலாய் என் பொன்மணியை நான் கண்ணுற்றேன்.

நன்றி மறப்பேனா நான்?

இன்னும் அவர் பற்றி எவ்வளவோ எழுதலாம்.

மகாலிங்கம் அவர்களை தூரத்தில் நின்று பார்த்தால் அவர் ஒரு தொழிற்கூடம்; பக்கத்தில் சென்று பார்த்தால் அவர் ஒரு பல்கலைக் கழகம்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 04 இன் பலன்கள்

23

### தோற்றம்

ராகுவுடன் ராகு சேர உண்டாகும் ஆதிக்கப் பலன். முழு ராகுவின் பலன். உயரமாக இருப்பார். நல்ல உறுதியாக உடற்கட்டு இருக்கும். இரட்டை நாடி சரீரம். மென்மையான தலைமுடி இருக்கும். சதுர முகமும் சிறு மூக்கும் பருத்த உதடுகளும் வரிசையற்ற பற்களும் இருக்கும். கறுப்பாக இருப்பார். கால்களில் பலமிராது.

### குணம்

உலக அறிவை நன்கு அறிந்தவராக இருப்பர். சாத்திரங்களை, உடற்பயிற்சிகளை, யோகப் பயிற்சியை அறிந்திருப்பர். மரியாதை, இங்கிதம் அறிந்தவரானாலும், தடிப்பான பேச்சும், தற்குறியான போக்கும் இருக்கும். தீய நண்பர் சேர்க்கை உண்டு. வேற்று மொழி அறிவும், நல்ல குரலும், திருத்தமான உச்சரிப்பும் அமையும். பல இடங்கள் சுற்றி வந்த அனுபவமிருக்கும். அட்ஜஸ்ட் செய்து பழகத் தெரிந்தவர். கோபமும் சுர்ரென்று வரும். அதிக செலவு செய்வர். பிறருக்கும் வாரியிறைப்பர். பிராணிகளிடம் அன்பிருக்கும். பிராணிகளைப் பழக்கும் அறிவு அமையும். சூதாட்டம் ஆடத் திறமையிருக்கும். வாழ்க்கையில் ஆபத்திற்குத் துணிந்து சாகசம் செய்ய முயலுவர்.

தம்மைவிட உலகம், சமுதாயம் பற்றி அதிக கவலைப்படுவர். பிறருக்கும் போதிக்கப் பிரசாரம் செய்வர். அச்சை இதற்குப் பயன்படுத்துவர். சீர்திருத்தவாதிகளாக உலகை உருமாற்றி அமைக்க வந்தவர் போலப் பேசுவர். வார்த்தைகளும் கருத்துக்களும் தானே வரும். உடலிலும் உள்ளத்திலும் பலம் உள்ளவர். நண்பர்களுடனேயே இருப்பர். புதிய அமைப்புக்களை உண்டாக்கித் தலைவர் ஆவர்.

திடீர்த் திருப்பங்களை உண்டாக்குவர். மனிதரை மாற்றி அமைக்க முயலுவர். இதற்காகப் பொருளைச் சொந்தமாகச் செலவு செய்வர். பொருளைவிடப் புகழை விரும்பிச் சம்பாதிப்பர். பிரபலமடைவர். எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் தப்பி விடுவர். நல்ல பலமுடையவர். மன பலமும் உண்டு. சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு எடுத்த காரியத்தை முடித்தே வருவார். பயன் கருதாமல் வேலை செய்வார்.

இவரை எவரும் விரும்பிச் சேருவாரே தவிர ஒதுக்கமாட்டார். இவர்களை நன்கு நடத்தினாலே, இவரிடம் நன்கு பேசிப் பழகினாலே உயிரையும் தந்து விடுவார். மனித நேயமுடையவர்.கலைகளில் ஞானம் உள்ளவர்கள். எலும்பு பலம் உள்ளவர். நோய்களைக் கிட்ட வரவிடமாட்டார்கள்.

### குடும்பம்

பெரிய குடும்பத்தில் பிறந்து பெரிய குடும்பமாகவே இருப்பார். காதல் வெற்றி பெறாது. பெண்களால் பிரச்சினை உண்டாகும். பலர் திருமணமாகாமலே இருந்து விடுவர். ஆனாலும் உலக ஆசைகள் இருக்கும். இவர்களுக்குத் தெரியாதது இல்லை என்பதால் ஏதாவது ஒரு தொழிலில் பணம் சம்பாதித்து விடுவர். பணம் புரட்டுவதில் நல்ல சாமர்த்தியமுள்ளவர்.

கலப்பு மண ஆசை உள்ளவர். வீடு வாசல், வண்டி, வாகனம் வாங்கி விடுவார். திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டு. வாரிசுகள் அதிகம் உண்டாகும். பொதுக் காரியங்களில் அதிக கவனம் செலுத்துவாரானபடியால் குடும்பத்தில் சச்சரவு, கோளாறு ஏற்படும். பெண் வாரிசுகள் அதிகம் பிறக்கும். அநேகமாக மனைவி திறமையில்லாதவளாக அமைவாள். வாழ்வில் புகழும் பிரபலமும் இவர்களின் வட்டாரத்திலாவது ஏற்படும். மாப்பிள்ளைகளுடன் தகராறு உண்டாகும்.

### தொழில்

ஒப்பந்தம் போட்டு வேலை பிடித்துச் செய்து இலாபம் எடுப்பார். அச்சடிக்கும் பிரஸ் வைப்பார். நூலெழுதுவார். கடை வைத்து வியாபாரம் செய்வார். போக்குவரத்துத் துறை தொழில் செய்வார். பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுவார். ஸ்டூடியோ நடத்துவார். வண்டி, வாகனம் வாங்கி விற்றுக் கொடுத்து இலாபம் ஈட்டுவார். தரகு, கமிஷன் ஏஜண்ட், சீட்டுக் கம்பனியில் பணம் சம்பாதிப்பார். முடி திருத்துவோராக, தையற்காரராக இருப்பார்.



வானொலி, தொலைக்காட்சிகளிலும் வேலை செய்வார். எழுத்தும் இலாபமாகும். கதை, கட்டுரை, வசனம், பாடல்கள் எழுத முடிந்தவர். மரக்கடை வைப்பார். மேடைப் பேச்சாளராக, அரசியல் வாதிகளாக ஏற்றம் பெறுவார். தொழிற்சாலைகளில் வேலை செய்வார். உடற்பயிற்சிசாலை வைப்பார். அழகுசாதன நிலையம் நடத்துவார். கட்டட வேலைகளும் செய்வார்.

### நோய்

சாதாரணமாக ஆரோக்கியமானவர் இவர். கபம், வாதம் சம்பந்தமான நோய்களும் காய்ச்சலும் வரலாம். முதுகு வலி போன்றவை வரலாம். ஒபேய்சிடி எனும் உடற்பருமன் உபத்திரவிக்கலாம்.

பிறந்த கூட்டு எண் இரண்டும் ஒன்றேயாகி விட்டதால் இவர்களது பெயர் எண் பலனையும் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் உதவி இதுதான்

*சென்ற வாரத் தொடர்ச்சி....*

பெரிய சிரிஞ்ச் இருந்தால், அதில் தண்ணீரை நிரப்பித் தொடர்ந்து அடிக்கலாம். இல்லையென்றாலும், பரவாயில்லை கைகளால தண்ணீரை அள்ளி அள்ளித் தொடர்ந்து பாதிக்கப்பட்ட கண்ணில் அடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

கையால் கண்ணைக் கசக்கக் கூடாது. விரலை விட்டு எடுக்க முயற்சிக்கக் கூடாது.

கண்களில் கண்ணாடி போன்ற கூர்மையான் பொருள் குத்தியிருந்தால், கையை விட்டு எடுக்க முயற்சிக்கக் கூடாது. அப்படி எடுத்தால், கண்ணில் இரத்தக் கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடனடியாக கண் நல மருத்துவரை அணுக வேண்டும்.

நேரடி வெளிச்சம், தூசி கண்களில் படாதவாறு, இரண்டு கண்களிலும் சுத்தமான துணி வைத்து, அதன் மேல் பிளாஸ்திரி போட்டு மூடிவிட வேண்டும்.

ஒரு கவர் அல்லது பேப்பர் கப் வைத்துக்கூட, கண்களை மூடலாம். அப் படியே கண் மருத்துவரிடம் போய்விட வேண்டும்.

பலத்த காயம் / அடிபடுதல்



உயரமான மரம் அல்லது கட்டடத்திலிருந்து யாரேனும் விழுந்துவிட்டால், உடனே இரத்தம் வருகிறதா என்று பார்க்க வேணடும். இரத்தம் வந்தால், முன்னே சொல்லியது போல, இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். இரத்தம் வெளியே வராவிட்டாலும் உள்ளே இரத்தக் கசிவு இருக்கலாம். அப்படி இருந் தால் மயக்கம் வரும். குளிரும். அவரைக் கீழே படுக்க வைத்து, கால்கள் இரண்டையும் மேலே சிறிது உயரமாகத் தூக்கிவைக்க வேண்டும். அவரைத் தூக்கும் போதும், கழுத்தின் நிலையைக் கவனமாகப் பார்த்துத் தூக்க வேண்டும், ஏனெனில், தண்டுவடம் பாதிக்கப்பட்டால், பிறகு ஆயுள் முழுவதும்




பிரச்னையாகிவிடும்.

கால்களை மடக்கியபடி விழுந்திருந்தால், காலை நீட்ட முயற்சிக்க வேண்டாம். உட்காரவைக்காமல், படுத்த நிலையில்தான் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல வேணடும்.

வாயில் இரத்தம் வந்தால், துப்பச் சொல்லலாம்.

விழுந்தவர் பெண்ணாக இருந்தால், அவர் கர்ப்பிணியா என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

**விஷம்/ஆசிட் குடித்தால்**

என்ன குடித்தார்கள், எவ்வளவு குடிக்கப்பட்டது என்ற விபரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

வாந்தி எடுக்கத் தூண்டக் கூடாது. விரலை உள்ளே விட்டோ, சாணம் அல்லது உப்புக் கரைசலைக் கொடுத்தோ, வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது.

அவராகவே வாந்தி எடுத்தால், இடது பக்கமாக ஒருக்களித்துப் படுக்கவைக்கலாம். வாந்தி உள்ளே போய், மூச்சுக்குழல் அடைபடாமல் இருக்க இது உதவும்.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

**நெஞ்சு வலி**

நெஞ்சு வலி வந்தவரை உட்காரவைத்து, முன்புறமாகச் சாய்த்து, நன்கு மூச்சை இழுத்து விடச் சொல்ல வேண்டும்.

ஏற்கெனவே நெஞ்சுவலிக்கான மாத்திரை எடுப்பவராக இருந்தால், டாக்டர் சொன்னபடி அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நெஞ்சுவலி வந்தால், அதை, "சாதாரண வாய்வுக் குத்து' என்று அலட்சியமாக விடவே கூடாது. இதய வலி எனில், யானை ஏறி மிதிப்பது போல், வலி பயங்கரமாக இருக்கும். மூச்சு விடச் சிரமமாக இருக்கும். வியர்த்துக் கொட்டும். சிலருக்குத் தாடை வரை வலி வரும். சிலருக்கு இடது கை வலிக்கும். சில சமயங்களில் முதுகு, வயிறுக்குக் கூட வலி பரவும்.


ஆன்றால், சர்க்கரை நோய் இருப்பவர்களுக்கு இவற்றில் எந்த அறிகுறியும் இருக்காது. அதனால் அவர்கள் எந்த மாதிரியான நெஞ்சு வலியாக இருந்தாலும், அதை "மாரடைப்பு' போலவே கருதி, டாக்டரிடம் போய்விடுவது நல்லது. சும்மா சோடா குடித்தால் வலி போய்விடும் என்று சொல்லித் தவிர்க்கக் கூடாது. தாமாக மாத்திரை வாங்கிப் போடுவதும் மிக ஆபத்து.

நெஞ்சுவலி வந்து விட்டால நேரம் என் பது மிக முக்கியம். நாம் தாமதிக்கும் ஒவ் வொரு நொடியும் ஆபத்து. அருகில் இருக்கும் மருத்துவமனை யில், இதய நோயக்கான சிகிச்சை உபகரணங்கள் (ஈ.ஸி.ஜி. போன்றவை) இருக்கும் இடமாகச் செல்வது நல்லது.

மாரடைப்பு என்றால், மார்புப் பகுதியில் அழுத்துவதுபோன்ற கடுமையான வலி இருக்கும். அதிகம் வியர்வை மற்றும் மயக்கம் வருவதுபோல் இருக்கும்.

இதில் எந்த வகையாக இருந்தாலும், உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குச்செல்வது நல்லது. மருத்துவமனைக்கு அழைதுச் செல்லும்போது பாதிக்கப்பட்டவருக்கு அஸ்பிரின் மாத்திரை கொடுக்க வேண்டும். இது இரத்தம் கட்டியாவதைத் தடுக்கிறது.

**மயக்கம்:**



மூளைக்குச் செல்லும் ஒடசிசன் தடைபடுவதால்தான் மயக்கம் ஏற்படுகிறது.

மயக்கம் வருவதைக் கொஞ்சம் முன்கூட்டியே தெரிந்து கொண்டோமானால் அவர் கீழே விழுவதற்குள் தாங்கிப் பிடித்து அடிபடுவதில் இருந்து காப்பாற்றி விடலாம்.

மயங்கியவரை, கீழே படுக்க வைத்து, கால்கள், இரண்டையும் சிறிது உயரத்தில் இருக்குமாறு மேலே தூக்கிவைக்கவும்.

காற்றோட்டம் தேவை. தண்ணீரால் முகத்தைத் துடைக்கலாம. சோடா போன்றவற்றைப் புகட்ட வேண்டாம்.

**மூச்சுத்திணறல்**

மூச்சுத்திணறல் ஏற்பட்டவரை உட்காரவைத்து, மெதுவாக மூச்சு விடச் செய்ய வேண்டும்.

**ஸ்ட்ரோக் (பக்கவாதம்)**

முகம் கோணுதல், பேச்சில் குழறல், கைகள் உதறுதல், வாயில் எச்சில் ஒழுகுதல் போன்றவை ஸ்ட்ரோக்கின் அறிகுறிகள்.

பாதிக்கப்பட்டவருடன் பேச்சுக் கொடுத்து, அவரை ஆசுவாசப்படுத்த வேண்டும். அவரால் பேசவோ, உங்களுக்குப் பதில் சொல்லவோ முடியாவிட்டாலும், நீங்கள் சொல்வதைக் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும்.

**காய்ச்சல்**

உடல் வெப்பநிலை அதிகமாக இருக்கும்போது, "ஸ்பாஞ்ச் பாத்' எனப்படும் ஈரத்துணியால் ஒற்றி எடுக்கும் முறை மிகவும் சிறந்த முதல் உதவி. இது, வெப்பநிலையையும் குறைக்கும்.

நான்கு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு, கண்டிப்பாக மருத்துவமனைக்கு வரும் வரையிலும், ஈரத்துணியை நெற்றியில்; அக்குளில் போட்டுப் போட்டு எடுத்தபடி இருக்க வேண்டும். இல்லையென்றால் அது வலிப்பாகவோ, ஜன்னியாகவோ மாறிவிடும் அபாயம் உள்ளது.

**சர்க்கரையின் அளவு குறைதல்:**

ஏற்கெனவே சர்க்கரை நோய் இருப்பவர்களுக்கு, திடீர் கோபம், எரிச்சல் போன்றவை ஏற்பட்டால் அல்லது எதற்கெடுத்தாலும் அவர்கள் சத்தம் போட்டுக் கத்தி டென்ஷன் ஆனால், அவர்களின் சர்க்கரை அளவு குறைந்துள்ளது என்பதை அறிந்துகொள்ளலாம். உடனே ஒரு சொக்லேட் அல்லது ஒரு ஸ்பூன் சர்க்கரையை வாயில் போட்டுக் கொள்ளச் செய்தால், சிறிது நேரத்தில் அந்த சுபாவம் மாறிவிடும்.

ஆனால், இது சுயநினைவுடன் இருப்பவர்களுக்கான முதல் உதவி.

சர்க்கரையின் அளவு குறைந்து, மயக்கம் ஆகிவிட்டால், உடனே அருகிலிருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதே சிறந்தது.

**பாலியல் பலாத்காரம்:**

பாதிக்கப்பட்டவருக்கும் முதலில் உளவியல் ரீதியான ஆதரவு தேவை. காயங்களுக்கு சிகிச்சை அளிக் கும் முன், அவருடைய ஒப்புதலைப் பெற்று விட்டுச் செய்ய வேண்டும்.

இரத்தக்கறை படிந்த உடைகள் அல்லது பொருள்கள் கிடந்தால், அவற்றை ஆதாரத்துக்காகப் பாதுகாகக வேண்டும்.

மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன், முடிந்தவரை குளித்தல், சிறுநீர் கழித்தல், பல் துலக்குதல் உடைகளை மாற்றுதல என்று எதையும செய்யாமல் இருப்பது நல்லது.

*(அடுத்த வாரம் தொடரும்)*

**ஜூனியர்விகடன்**

# இலங்கை மீது பொருளாதார தடை சாத்தியமற்றது

## அமைச்சர் நிர்மலா தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது சாத்திய மற்றது என இந்திய மத்திய அரசாங்கத்தின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டுமென தமிழக மாநில அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்து தமிழக சட்ட மன்றில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பொருளாதாரத் தடைகளை விதிப்பது சாத்தியமற்றது என அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுத் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (2)

# ஐ.நா.விசாரணை முடிவில் பொருளாதாரத் தடை

## சஜித் எம்.பி. கூறுகின்றார்



இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். வீரகெட்டிய பிரதேசத்தில் நடை பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் இந்த விசாரணை முடிவில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால்வழங்கப்பட்டு வரும் சந்தை வாய்ப்புக்கள் இலங்கைக்கு முடக்கப்பட்டால் பாரியளவில் நெருக்கடி நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஆளும் கட்சி முனைப்பு காட்டத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு அரசாங்கமே பொறுப்பு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த நிறைவின் பின்னர் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்த போதிலும், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கைகள் கிடையாது எனவும் யுத்த வலயம் உரிய முறையில அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களுக்கும் சமவுரிமை கிடைக்கும் தீர்வுத்திட்டம் அவசியம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

**அனைத்து இன மக்களும் சமவுரிமைகளுடன் வாழக்கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 25 ஆவது பிரதிநிதிகள் மாநாடு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன மக்களுக்கும் சம்வுரிமைகள் வழங்கப்படக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது .

சமமாக வாழக் கூடிய வகையிலும், தீர்மானங்களை எடுக்கக் கூடிய வகையிலும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

மாகாணசபையின் ஊடாக சுயாட்சி அதிகாரங்களை வழங்கி அதன் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட முடியும். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாட்டை காட்டிக் கொடுக்கும் திட்டங்கள் எதுவும் கிடையாது.

எனினும், ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதா? இல்லையா என்பது குறித்த பாராளுமன்ற வாக்கெடுப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கவில்லை. முஸ்லிம் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் முஸ்லிம் மக்கள் ஆபத்துக்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது.

சிங்கள மக்களுக்கு நிகரான உரிமைகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும்என்பதே எமது கோரிக்கையாகும் எனவும், நாட்டை துண்டாட எண்ணியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாக சிலர் போலிப் பிரசாரம் செய்து வருகின்றனர்.தேசப்பற்றாளர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் தரப்பினர் உண்மையிலேயே தேசத்துரோகிகள். பெரும்பான்மையான சிங்கள பௌத்த மக்கள், தமிழ் முஸ்லிம்களை துன்புறுத்த முயற்சிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# கெஹலியவின் கருத்துக்கு கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

ஐ. நா. விசாரணைக் குழுவின் முன்பாக சாட்சியம் அளிப்பவர்கள் அதற்கான விளைவை சந்திக்க நேரிடும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

ஒரு ஜனநாயக அரசின் ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமாக இருப்பவர் இப்படியான கருத்துக்களை வெளியிடுவது மிகவும் கவலைக்குரிய விடயம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் வெளிநாட்டு செய்தி தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

"அமைச்சர் உள்ளூர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கருத்தானது, ஒரு அப்பட்டமான மிரட்டல் என்றும், ஒரு சாதாரண இலங்கைப் பிரஜை இறுதிக்கட்ட போர் தொடர்பில் தனக்கு தெரிந்ததை கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுவது, உண்மை வெளிவராமல் தடுக்க எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகும்.

இவ்வாறான ஒரு நிலைப்பாடு கண்டிக்கப்பட வேண்டியதும், தவறான கருத்துமாகும்.

அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் தடைபட்டுள்ளன.

அமைச்சரது இந்தக் கருத்தை சர்வதேச சமூகமும். ஐ. நா. அமைப்பும் உள்வாங்க வேண்டும்.

ஐ.நாவின் விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதா, இல்லையா? என்பதை நாடாளுமன்றமே முடிவு செய்யும் என்று ஜனாதிபதி கூறியுள்ளது புதிய விடயம் அல்ல, அந்த குழுவுக்கு அனுமதியளிக்கப்பட்டாது என்பதை அரசு முன்னரே தெட்டத் தெளிவாக கூறிவிட்டது.

இப்போது நாடாளுமன்றம் முன்பாக அப்படியொரு பிரேரணையைக் கொண்டு வருவதாகக் கூறுவது ஒரு கேலிக்கூத்து.

இறுதிக்கட்டப் போரை தொடங்குவதற்கு முன்போ, அல்லது போர் நடைபெறும்போதோ நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டுவராத அரசு, இப்போது ஏன் ஐ. நா. விசாரணை குறித்த முடிவை நாடாளுமன்றம் எடுக்கும் என கூறுகிறது எனவும் அவர் கேள்வியெழுபபினார். (2)

# சட்டத்தை மீறியோருக்கு தண்டனை வழங்கப்படும்

## டுவிட்டரில் ஜனாதிபதி

(கொழும்பு)

அலுத்கம தாக்குதல் சம்பவம் தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

தற்போது பொலிவியாவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி டுவிட்டரின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ள ஒருவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் அமைதியை பேண வேண்டியது அவசியமானது. அலுத்கமவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்.

பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அண்மையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றிருந்த நிலையில், நேற்று முன்தினம் பொதுபல சேனா அமைப்பு குறித்த பிரதேசத்தில் கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்தின் பின்னர் மீண்டும் கலவரம் வெடித்தது.

மோதல்களைத் தொடர்ந்து அலுத்கம மற்றும் பேருவளை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பொலிஸாரினால் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது.(2)

# அரசாங்கம் கவிழும் காலம் வெகு தொலைவில் இல்லை

## கபீர் ஹாசிம் தெரிவிப்பு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களே இன்று தாம் சார்ந்துள்ள அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர் எனவும் அரசு கவிழும் காலம் வெகு தொலைவிலில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தில் பண்டாரவளை மாநகர சபை உறுப்பினர் எம். நௌசாட் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்


இன்றைய சமகாலத்தில் அரசாங்கத்திற்குள் இருக்கின்றவர் மட்டுமல்லாது அமைச்சர்களும் அரசாங்கத்தையும் அதன் செயற்பாடுகளையும் வெளிப்படையாக விமர்சித்து வருகின்றன.


இது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் சக்தியாக இருந்து வரும் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகிய அமைச்சர்கள் மட்டுமன்றி இடதுசாரிக் கட்சிகளும் அரசாங்கத்தின் மீதான தமது அதிருப்திகளை தெரிவித்து வருவதுடன் ஊடகங்களில் அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றனர்.

இந்தளவு சிக்கல்கள் எழும் அளவில் அரசாங்கத்துக்குள் பிரச்சினைகள் உள்ளன.

எனவே, அடுத்து நடைபெறவிருக்கும் ஊவா மாகாண சபைத் தேர்தல்களில் மக்கள் நன்கு சிந்தித்து நிலைமைகளை உணர்ந்து வாக்களிக்க வேண்டியது மிகமிக அவசியமாக இருக்கின்றது என்றார். (2)








**தென்மராட்சி இலக்கிய அணி நடத்திய கம்பன் விழா இரு தினங்கள் காலை, மாலை அமர்வுகளாக சாவகச்சேரி இந்து கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் கா.அருந்தவபாலன் தம்பதியினர் மங்கல விளக்கேற்றுவதையும் புலவர் மா.இராமலிங்கம் தலைமையில் கருத்தரங்கம் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுயினரையும் படங்களில் காணலாம்.**

**(படங்கள்:-சாவகச்சேரி , மானிப்பாய் செய்தியாளர்கள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பாரதம்- உன்னத பாரதம் இதுதானா?



கடந்த 46 ஆண்டு காலமாக காவிரிப்பிரச்சினையில் ஒவ்வொரு முறையும் தமிழகம் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு இயற்கை நீதியை நிலை நிறுத்தப் போராட வேண்டியிருந்தது.

நடுவர்மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்த தீரப்புகளை கர்நாடகம் அலட்சியம் செய்தபோது அதைக் கண்டிக்கவோ நடவ்டிக்கை எடுக்கவோ மத்திய அரசு முன்வரவில்லை.

நடுவர் மன்றம் அமைப்பதிலிருந்து அதனுடைய இறுதித் தீர்ப்பை கெசட்டில் வெளியிடுவது வரை ஏழு முறைகளுக்கு மேல் உச்ச நீதிமன்றத்தின் படிகளில் தமிழகம் ஏறி இறங்கிக் களைத்தது.

2007 ஆம் ஆண்டு ஜனவரியில் நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பை அளித்தது. சட்டப்படி அதை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், அதை மத்திய அரசு வெளியிடவில்லை. மீண்டும் 2012 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தலையிட்டு ஆணைபிறப்பித்த பிறகே அரசிதழில் அத்தீர்ப்பு வெளியிடப்பட்டது.

பன்மாநில நதிநீர்ப்பிரச்சினைச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின்படி, அரசிதழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்டவுடன், அது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும், உடனடியாக அத்தீர்ப்பை நிறைவேற்ற வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்திற்கும் உண்டு எனத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தீர்ப்பைச் செயற்படுத்துவதற்காக 1956 ஆம் ஆண்டு நதிநீர் வாரியச் சட்டத்தின்படி காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினை உருவான 46 ஆண்டு காலத்தில் பதவியிலிருந்த 9 பிரதமர்கள் காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் செயலற்று இருந்தார்கள். உச்ச நீதிமன்றம் 7 முறை தலையிட்டுத் தீர்ப்புகளை வழங்கிய பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் இன்னமும் அமைக்கப்படவில்லை.

நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்த தீரப்புகளை கர்நாடகம் கொஞ்சமும் மதிக்கவில்லை. இன்னமும் மதிக்கத் தயாராக இல்லை என்பதை அம்மாநிலத்தைச் சேர்ந்த பல தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

முன்னாள் முதலமைச்சரான எடியூரப்பா, மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஒருபோதும் கர்நாடகத்திற்கு எதிராகச் செயற்படாது. ஏனென்றால், தென்னிந்தியாவில் பா.ஜ.கவை முதன்முறையாக முதல்வர் அரியணையில் அமரவைத்து அழகு பார்த்தவர்கள் கர்நாடக மக்கள். இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவிற்கு 17 இடங்களை அம்மக்கள் அளித்துள்ளனர். பா.ஜ.கவை நம்பி வாக்களித்த கர்நாடக மக்களுக்கு அநீதி இழைக்க விடமாட்டோம் என்று கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமரான தேவகௌட, அரசியல் சுயலாபத்துக்காக காவிரி மேலாண்மை வாரியத்தை மோடி அமைத்தால் கர்நாடகத்தில் பெரும் எதிர்ப்பு உருவாகும் என எச்சரித்தார்.

கர்நாடக முதல்வரான சித்தராமையா, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுப்போம். அப்படி அமைப்பது கர்நாடகத்திற்கு இழைக்கப்படுகிற மிகப்பெரிய அநீதியாகும் என்று கூறியுள்ளார்.

மத்திய இரசாயனத் துறை அமைச்சர் அனந்தகுமார் கர்நாடகத்தின் நிலம், நீர், மொழி விவகாரத்தில் பிரதமர் நரேந்திரமோடி கர்நாடகத்திற்கு அநீதி இழைக்க மாட்டார். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

இத்துடன் நிற்கவில்லை. 10.06.2014 அன்று பிரதமர் மோடியை, கர்நாடக முதல்வர் சித்தராமையா தலைமையில் அம்மாநிலத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் சந்தித்தனர்.

முன்னாள் பிரதமர் தேவகௌட, முன்னாள் முதலமைச்சர்கள் பி.எஸ்.எடியூரப்பா, ஜெகதீஷ் ஷெட்டர், ஹெச்.டி. குமாரசாமி, எம்.வீரப்ப மொய்லி ஆகியோரும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்குழுவில் இடம்பெற்றனர்.

அதுமட்டுமல்ல, இந்தக் குழுவில் மத்திய அமைச்சர்கள் வெங்கய்ய நாயுடு, அனந்த குமார், சதானந்த கவுடா, ஜி.என்.சித்தேஸ்வர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அமைச்சர்கள் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்தியா முழுமைக்கும் பொதுவானவர்களாக மாநிலங்களுக்கிடையே வேறுபாடு காட்டாமல் நடுநிலையோடும் நேர்மையோடும் தங்களின் பதவிப் பொறுப்பை வகிக்க வேண்டும்.

இந்த உன்னதமான மரபை கர்நாடகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அப்பட்டமாக மீறி காவிரிப் பிரச்சினையில் ஒருதலைப்பட்சமாகவும் உச்ச நீதிமன்றம், நடுவர்மன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளை மதிக்காமலும் அவற்றை பிரதமர் செயற்படுத்தக் கூடாது என்றும் வற்புறுத்தியுள்ளார்கள்.

இதன்மூலம் எந்த அரசியல் சட்டத்தின்மீது ஆணையிட்டு அவர்கள் பதவியை ஏற்றிருக்கிறார்களோ அந்த அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறியிருக்கிறார்கள்.

தமிழகத்திற்கு அநீதி இழைப்பதில் கர்நாடகமும் கேரளமும் போட்டி போடுகின்றன. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் 34 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகம் உச்சநீதிமன்றத்தில் போராடி நல்ல தீர்ப்பினைப் பெற்றிருக்கிறது.

பெரியாறு அணை வலிமையாக இருக்கிறது. எனவே, அணையின் நீர்மட்டத்தை 142 அடி உயர்த்தலாம் என கடந்த 7-5-2014 அன்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு தீர்ப்பளித்தாகிவிட்டது. மேலும் அத்தீர்ப்பில் பெரியாறு நீர், தங்கள் மாநிலத்திற்குள் ஓடும் நீர் என்ற கேரள அரசின் வாதம் தவறானது.

முல்லைப் பெரியாறு நதி கேரளத்தில் ஓடினாலும் தமிழகத்தின் வழியே 114.ச.கி. மீற்றர் பரப்பளவுக்கு வந்து செல்வ்தால் இரு மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியாகும். இந்நதிமீது கேரளம் மட்டும் உரிமை கொண்டாட முடியாது. தமிழகத்திற்கும் சம உரிமை உள்ளது என்றும், புதிய அணை கட்ட வேண்டும் என்ற கேரளத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்தும், பெரியாறு நீரின் மீது உரிமை கொண்டாடிய கேரளம் நிறைவேற்றிய சட்டம் செல்லாது என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆனால், இன்னும் அணை பலவீனமாக இருக்கிறது. எனவே நீர்மட்டத்தை உயர்த்தினால் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட கேரள மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற பொய்யையே திரும்பத் திரும்பக் கேரள அரசியல்வாதிகள் கூறிவருகிறார்கள்.

மத்திய அரசு அமைத்த 6 இற்கு மேற்பட்ட நிபுணர் குழுக்கள் அணையைப் பரிசோதனை செய்து அணை பலமாக இருப்பதை உறுதிப் படுத்தியிருக்கின்றன. ஆனாலும், மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க 10 கோடி ரூபாய்க்கும் மேல் செலவு செய்து அணையைத் தமிழக அரசு மேலும் பலப்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றம் அமைத்த நீதியரசர் கே.டி.தாமஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு, நிபுணர் குழுவின் ஆலோசனையை ஆராய்ந்து பெற்றும் அணைக்கு நேரிடையாகச் சென்று பார்வையிட்டும் அணை வலிமையாக இருப்பதை உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. அதற்குப் பின்னர் உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியது.

மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழுவிற்குத் தலைமை தாங்கிய கே.டி.தாமஸ் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், அவர் கேரள மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டதாகக் கேரள அரசியல்வாதிகள் இழிவாகச் சாடினார்கள்.

09-06-2014 அன்று கேரள சட்டசபை கூடிப் பழைய பல்லவியையே பாடிப் புதிய அணை கட்டவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

மேலும் கேரள மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்ச உணர்வு தொடர்பாக விதி 143 இன் கீழ் உச்ச நீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் விளக்கம் கேட்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த விவகாரத்தை அதிக நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற பிரிவு விசாரிக்க வேண்டும் என்றும் கேரள முன்னாள் முதலமைச்சர் அச்சுதானந்தன் கூறியுள்ளார்.

ஏற்கனவே உச்சநீதிமன்றம் நீர்மட்டத்தை உயர்த்தலாம் என்று கூறியபோது அரசியல் சட்டப் பிரிவுதான் இதை விசாரிக்க வேண்டும் என்று கேரளம் முறையிட்டு அதன்படி அரசியல் சட்டப்பிரிவு அமைக்கப்பட்டு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று தீர்ப்பு வழங்கிய பிறகு மீண்டும் வேறொரு பிரிவு அமைக்கப்பட வேண்டும் எனக் கேரளம் கூறி இன்னும் பல ஆண்டுகளுக்கு இவ்வழக்கை இழுத்தடிக்க முயலுகிறது.

பெரியாற்று நீரில் கேரளத்தின் தேவை போக வீணாகக் கடலில் கடக்கும் நீரின் அளவு 2313 மி.க.மீற்றர் ஆகும்.

இதில் நாம் கேட்பது அதாவது, அணையின் நீர்மட்டம் 142 அடி உயரமாக இருந்தால் 217.10 மி.க.மீற்றர் ஆகும்.

49 ஆண்டு காலமாக காவிரிப் பாசன விவசாயிகளும், 30 ஆண்டு காலத்திற்கும் மேலாக முல்லைப் பெரியாறு பாசன விவசாயிகளும், தமிழக அரசும் ஓயாமல் நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றில் முறையிட்டுப்போராடி நீதியை நிலைநிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்களுக்கு இயற்கை நீதிப்படியும், சட்டப்படியும் உரிமையான தண்ணீரைத் தரமறுத்துக் கர்நாடகமும், கேரளமும் அழிச்சாட்டியம் செய்துவருவதைப் பார்த்துத் தமிழக விவசாயிகள் கண்ணீர் மல்கக் குமுறலோடு கேட்கும் கேள்வி, ஒரே பாரதம்- உன்னத பாரதம் என்பது இதுதானா?

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆட்சி நிர்வாகத்தில் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன

## வடமாகாண முதலமைச்சர் ஆதங்கம்



**வடமாகாண ஆட்சி நிர்வாகத்தில் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழர்களின் உடனடித் தேவைகளை இந்தியப் பிரதமர் மோடி அடையாளம் கண்டுள்ளார். இவை குறித்து இலங்கைத் தலைவர்களிடம் அவர் வலியுறுத்தி உள்ளதாகத் தெரிகிறது. இனிமேல் இலங்கை அரசுதான் செயற்பட வேண்டும் என விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டில்லியில் அண்மையில் சந்தித்துப் பேசியபோது 13ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது.

1987இல் இந்தியா- இலங்கைக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 13ஆவது சட்டத் திருத்தம் உருவாக்கப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டில் அப்போதைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் ஆகியோரிடம் 13ஆவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதியளித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட வடக்கு முதல்வர், ஆட்சி நிர்வாகத்தில் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன, வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவப் படைகளால் நிர்வாகத்துக்கு பெரும் தடை ஏற்பட்டுள்ளது.

13ஆவது சட்டத் திருத்தம தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி நாடு முழுவதும் இராணுவ தலையீடு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

தற்போதைய நிலையில் வெறுப்பும் ஏமாற்றமும் மட்டுமே மிஞ்சியுள்ளன. எனினும் முழுமையாக நம்பிக்கையை இழக்கவில்லை என்றார்.

இதேவேளை வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கூறுகையில்,

எங்களிடம் எந்த அதிகாரமும் இல்லை, நிதி பற்றாக்குறையும் ஆள் பற்றாக்குறையும் பெரும் சவாலாக உள்ளன.

கடந்த 25 ஆண்டுகளாக வடக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. இப்போது நாங்கள் வெற்றி பெற்ற பின்னர் போதிய நிதி ஒதுக்கீடு இல்லை.

வடக்கு மாகாணத்தில் ஆளுநரே அதிக அதிகாரம் படைத்தவராக உள்ளார். அவர்தான் அதி காரமையமாக செயற்படுகிறார். அரசு ஊழியர்கள் அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டு நடக்கின்றனர் என்றார்.

முதல்வர் விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டுகளை வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா மறுததுள்ளதுடன், வடக்கு மாகாணத்தில் நிறை வேற்றப்பட்ட 120 தீர்மானங்களில் 90 சதவீதம் ஆட்சி நிர்வாகத்துக்கு தொடர்பில்லாதவை என்று குற்றம்சாட்டியுள்ளார். (2)

# ஆணின் சடலம் மூளாயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மூளாய் முன்கோடைப் பகுதியில் இருந்து கழுத்து வெட்டப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலத்தினை நேற்று முன்தினம் காலை மீட்டதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கீரிமலை வீதி சித்தன்கேணியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி ப்விகரன் (வயது 37)என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் கையில் பிளேட் ஒன்று இருந்ததாகவும் விசாரணையின் போது சடலமாக மீட்கப்பட்ட நபர் குறித்த பகுதிக்கு அருகில் உள்ள கடையொன்றில் பிளேட் வாங்கி சென்றதாக உரிமையாளர் தெரிவித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிகவிசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக வட்டுக்கோட்டைப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-6)

# டெங்கை குணமாக்கும் தவறான விளம்பரங்களுக்கு முழுமையான தடை

## சுகாதார அமைச்சு உத்தரவு

ஆச்சரியமான முறையில் டெங்கு காய்ச்சலை குணமாக்குவதாகக் கூறும் தவறான விளம்பரங்களை முழுமையாகத் தடை செய்யுமாறு சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

தராதரமற்ற சுதேச மருத்துவர்கள் இத்தகைய விளம்பரங்களை ஊடகங்களில் பிரசுரிக்கின்றனர்.

இவை ஆபத்தானதாகும் இறுதியில் பாரதூரமான சுகாதார சிக்கல் நிலைகளும் உருவாகலாம். டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் நபுணத்துவ சனசமூக வைத்தியரை நீத்தா பன்னில ஹெட்டி இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான வைத்தியர்கள் தாம் கொடுக்கும் மருந்துகளில் உள்ளடக்கி இருக்கும் பொருட்களைக் கூறுவதில்லை.

இவற்றில் "லேபல்"களும் இல்லை. அமைச்சின் அங்கீகாரமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

டெங்கு என்றதும் தகுதியான வைத்தியரைக் காண வேண்டும். போலியான தவறான மருந்துகளை நாடக்கூடாது. டெங்குக்கு மாற்று மருந்துகளை நாடாமல் முறையான மருந்தை தகுதி படைத்த வைத்தியர்களிடமிருந்து பெற வேண்டும்.

இவ்விடயமாக அறிவூட்டல்களும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (2)

# மாநகரசபையுடன் போட்டிபோட மாகாண சபையால் முடியவில்லை

## மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை பொறுப் பேற்று 10 மாதங்கள் கடந்த நிலையிலும் ஆளும் கட்சியினர் மக்களுக்காக எவ்வித சேவைகளையும் முன்னெடுக்கவில்லை.

ஆனால் யாழ்.மாநகர சபை மக்களுக்காக தனது சேவைகளை திறம்படச் செய்கின்றது. அந்தளவு சேவையினை மாகாண சபையினரால் வழங்க முடியவில்லையென யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

100 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் குருநகர் தொடர்மாடிக் கட்டடத் தொகுதியினை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1987 ஆம் ஆண்டிலிருந்து எமது மக்கள் செய்த தியாகங்கள் மூலம் எமக்கு வாய்ப்புக்கள் தற்போது கிடைத்துள்ளன. அந்த வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தி பயன்களை அனுபவிக்க வேண்டும்.

சில அரசியல் வாதிகள் மேடைப் பேச்சுக்கள் மூலம் இளைஞர், யுவதிகளை சூடேற்றி அவர்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளனர்.

அவ்வாறு இல்லாமல் முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அவர்கள் முன்வரவேண்டும்.

பாராளுமன்றத்தில் நீலிக் கண்ணீர் வடிக்கும் கூட்டமைப்பினர் தற்போது மாகாணசபையினையும் கைப்பற்றி பின்னர் சொகுசு கார்களுக்காகவும் சலுகைகளையும் பெற முண்டியடிக்கின்றனரே தவிர மக்களுக்கு தேவையானதைப் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# இன்று ஒரு தகவல்

## தற்பெருமை

மனிதனுக்கு உடம்பும் அறிவும் வலுவாக இருக்க வேண்டும். ஆனால் சில பேருக்கு பலமாக இருக்கும். சிலபேருக்கு அறிவு பலமாக இருக்கும். அதேநேரம் அவர்களிடம் இன்னொரு பலவீனம் இருக்கும். அதாவது தற்பெருமை.

தான் பெரிய பலசாலி என்ற நினைப்பு அவர்களிடம் இருந்து கொண்டேயிருக்கும். பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களில் அவர்களது தோல்விக்குக் காரணம் இந்த தற்பெருமைதான்! சீனாவில் ஒரு அறிஞர் இருந்தார். அவரின் பெயர் "எப்பெண்டி".

ஒரு நாள் அவரைத் தேடி ஒருவன் வந்தான். அவன் பெரிய பலசாலி. அதாவது உடம்பால் பெரிய பலசாலி. அவன் இவரைப்பார்த்து "ஐயா... நான் ரொம்ப பலசாலி! நீங்களோ அறிவால் பலசாலி... நாம் இருவரும் சேர்ந்து நண்பர்களாக இருப்போம்" என்றான்.

அந்தப் பெரியவர் அவனைக் கொஞ்ச நேரம் உற்றுப்பார்த்தார். பின்னர் அவனிடம் "சரி, நீ எந்த வகையில் பலசாலி?" என்று கேட்டார். உடன் அவன் தன்னைப் பற்றி கூற ஆரம்பித்தான்.

"என்னால் ஒரு பெரிய பாறாங்கல்லையே அலாக்காகத் தூக்க முடியும். நம்முடைய ஊர் எல்லையில் நின்று கல்லைத் தூக்கி எறிந்தால் அது நகரத்தைத் தாண்டிப் போய் உள்ளே விழும் அளவுக்கு அவ்வளவு வேகமாக கல்லை வீச என்னால் முடியும்" என்றான்.

"சரி... வா சோதனை செய்து பார்ப்போம்" என்று கூறிய அந்தப் பெரியவர் அவனை அந்த நகரத்தின் மைதானப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். தன்னுடைய சட்டைப் பையில் இருந்து ஒரு சின்ன பட்டுக் கைக்குட்டையை எடுத்து அவனிடம் கொடுத்து "நீ பெரிய பலசாலி என்கிறாய் இதோ இந்தத் துணியை சிவருக்கு வெளியே போய் விழுமாறு உன்னால் எறிய முடியுமா?" என்றார்.

அதற்கு அவன், "ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறிபவன் நான். இந்தச் சின்னத் துணியையா என்னால் தூக்கி எறிய முடியாது? தாருங்கள் அதை" என்று வேண்டி பலம் கொண்ட மட்டும் வேகமாக வீசி எறிந்தான்.

கனம் இல்லாத அந்தக் கைக்குட்டை சுவரைத்தாண்டிப் போகவில்லை. கொஞ்ச தூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது. பெரியவர் சிரித்துக் கொண்டே என்ன நண்பா முடியவில்லையா? என்று கேட்டார். அவர் பேசாமல் நின்றான். "என்னால் முடியும்" என்றார் பெரியவர். அவர் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தான்.

பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சிறிய கல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார். கல் தெரியாத அளவுக்கு துணியால் முடிச் சுருட்டிப்பிடித்து அந்தக் கல்லுடன் சேர்ந்து கைக்குட்டையை வேகமாக எறிந்தார்.

அந்தத் துணியும் கல்லுடன் சேர்ந்து சுவருக்கு வெளியில் போய் விழுந்தது. இப்பொழுதுதான் அவனுக்கு புரிந்தது. உடன் பலத்தை விட அறிவு பலம் தான் பெரிதென்பது. உடல்பலமும் அறிவு பலமும் சேர்ந்து இருந்தால் சில சமயங்களில் ஆபத்தும் ஏற்படலாம்.

உடல் பலம் பொருந்தியது சிங்கம். அதற்கு அறிவும் இருந்து விட்டால் என்ன ஆகும் தெரியுமா? அதை விளக்க ஒரு கதை. ஒரு ஆசாமி காட்டு வழியால் போய்க் கொண்டிருந்தான். திடீரென ஒரு சிங்கம் எதிரில் வந்துவிட்டது. இந்த ஆளுக்கு ஒன்றுமே புரியவில்லை. உடனே அந்த இடத்தில் உட்கார்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தான். இதைப் பார்த்ததும் சிங்கமும் அவனுக்கருகில் வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டது.


அந்த ஆளுக்கு இதைப் பார்த்ததும் மனதில் லேசான சந்தோசம். அவன் சிங்கத்திடம் சொன்னான் "சகோதரனே உன்னைப் பார்த்ததும் உயிர்போய் விடுமோ என்று பயந்தேன். ஆனால் நீயும் என்னுடன் சேர்ந்து கடவுளை தியானிக்க ஆரம்பித்தாய். எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது தெரியுமா!டுடு என்றான். உடனே அந்தச் சிங்கம் "பேசாமல் இரு... சத்தம் போடாதே... உன்னை எனக்கு இரையாகக் கொடுப்பதற்காக இறைவனுக்கு கண்ணை மூடி நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு

## எதிர்பார்ப்புகளும் நடைமுறைகளும்



பொ.அருணகிரிநாதன்
SLEAS III
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

பாடசாலை முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும் இலங்கையில் அரசாங்கம், அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளிலும் பிரிவேனாக்களிலும் ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்புச் செயல்முறையை அறிமுகப்படுத்தி செயற்படுத்த 20.09.2001 திகதி இடப்பட்ட 2001/22 சுற்றுநிருபம் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இன்று இது பாடசாலைகளில் நடைமுறையிலுள்ளது.

ஆசிரியர்களை செயலாற்றுகை தரங்கணிப்பிற்கு உட்படுத்துவதன் மூலம் அவர்கள் பெற்றுக்கொள்கின்ற பின்னூட்டல் செயற்பாடுகள் ஆசிரியர்களின் செயலாற்றுகைத் தரத்தை விருத்தி செய்வதற்கும் தொழில் வாண்மை விருத்திக்கும் உந்து சக்தியாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் வரவுள்ள பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்திற்கு (SBTD) செயலாற்றுகைத் தரங்கணிப்பு முக்கிய தேவைப்பாடாக இருக்கும். ஆசிரியர்களின் தொழிற் தேவைகள் இதன்மூலம் அறியக் கூடியதாக இருக்கும்.

சிறந்த முகாமைத்துவச் செயற்பாடுகளின் மூலம் ஆசிரியர்களின் செயலாற்றுகைத்தரத்தை உயர் மட்டத்தில் பேணுவ்தும் கல்வி உலகில் தேவையாக உள்ளது. அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு பங்களித்து வரும் ஆசிரியர்களின் அறிவாற்றலும் திறன்களும் தேர்ச்சிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கு செயலாற்றுகை தரங்கணிப்பு அடிப்படையாகக் கொள்ளப்படலாம்.

**தரங்கணிப்பின் நோக்கங்கள்**

+ பாடசாலையின் நோக்கத்துடனும் ஒவ்வொரு ஆசிரியரதும் செயற்பாடுகளுக்கு இடையிலும் ஒரு ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்.
+ ஒவ்வொரு ஆசிரியரதும் செயலாற்றுகைத் தரத்திட்டத்திற்கும் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திற்கும் (SDP) இடையில் தொடர்பினைக் கட்டியெழுப்புதல்.
+ ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் தொடர் பின்னூட்டலை வழங்குவதன் மூலம் ஆசிரியர் செயலாற்றுகைத் தரத்தை மேம்படுத்தல்.
+ ஒவ்வொரு ஆசிரியருக்கும் தத்தமது தொழில் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு கொள்ளவும் தொழில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் உதவுதல்.
+ ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்வினைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை ஒன்றினை வழங்குதல்.
+ ஆசிரியரின் தொழில் விருப்பு, ஊக்கம் என்பவற்றை விருத்தி செய்தல்.
+ உயர்வினைத்திறனையும் தேர்ச்சிகளையும் ஏற்படுத்துவதன் மூலம் கல்வித்துறை பற்றிய மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.

**செயலாற்றுகைத் தரங்கணிப்பின் பங்காளர்கள்**

+ தரங்கணிக்கப் பெறுநர் (கணிப்பீட்டுக்கு உட்படும் ஆசிரியர்)
+ தரங்கணிப்பிடுநர் (தரங் கணிக்கப்பெறுநரை மேற்பார்வைசெய்பவர்)
+ தரப்படுத்துநர் (கணிப்பீடு நியாயமானதும் பக்கச்சார்பற்றதும் என்பதை தீர்மானிப்பவர்)

**செயலாற்றுகைத் தரத்திட்டம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது**

**1. செயற்பாட்டினை இனங்காணல்**

+ கற்றல்,கற்பித்தல் செயற்பாடு
+ போதுமான பாடவேளை, நேர சூசியில் கிடைக்காத போது முகாமைத்துவத்தில் வழங்கப்பட்ட கடமைகள்
+ ஆசிரியர்களால் சுயமாக முன்வந்து பொறுப்பேற்று செய்யும் கடமைகள்

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இது பின்வரும் தலைப்புக்களின் கீழ் திட்டமிடப்பட வேண்டும்.

+ வருடத்திற்கான செயற்பாடுகள்
+ செயற்பாடுகளைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் வளங்கள், உதவிகள், பயிற்சித் தேவைகள், வழிகாட்டல்கள்
+ செயலாற்றுகை தொடர்பான தரங்காட்டி
+ தரங்கணிக்கப் பெறுநர் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்
+ தரங்கணிப்பு இடுநரின் சிபாரிசு

எல்லா ஆசிரியர்களும்தரக்கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். தரங்கணிப்பிடுநர் தரப்படுத்தலின் சிரேஷ்ட தன்மை, தொழில்வாண்மைத்துவத்தில் சிரேஷ்ட தன்மை நியமனத்தின்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

ஒரு கணிப்பிடுநர் 8-12 வகையான தொகையினரை கணிப்பீட்டுக்கு உட்படுத்தலாம்.

நடைமுறையில் இச் செயற்பாடு



கல்வித் தரிசனம்

கள் பாடசாலைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அவதானிக்க முடியவில்லை. தரங்கணிப்புப் படிவம் நிரப்புதல், திட்டமிடல் செயற்பாடுகள், முன்னேற்ற மீளாய்வு போன்ற விடயங்கள் பயனுறுதி மிக்கதாக காணப்படவில்லை. பின்வரும் நிலைகள் அவதானிக்கப்பட்டன.

+ ஆசிரியர்கள் தரங்கணிப்பு தொடர்பான போதுமான விளக்க்த்தை பெறவில்லை.
+ படிவங்கள் பூரணப்படுத்தலில் தெளிவான தன்மை காணப்படவில்லை.
+ எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் தொடர்பானபூரணத்துவமற்றதன்மை காணப்பட்டமை.
+ செயற்பாடுகள் வெறுமைத் தன்மை உள்ளவையாகவும் குறிப்பாக எதையும் உள்ளடக்கி இருக்கவில்லை.
+ எதிர்பார்க்கப்படும் வளங்கள், தரங்காட்டிகள் தொடர்பில் போதுமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.
+ எதிர்நோக்கிய பிரச்சினைகள் சரியாகக் குறிப்பிடப்படவில்லை.
+ தரங்கணிப்பிடுநர்களின் சிபாரிசுகள்திருப்திகரமாக அமையவில்லை.
+ முதலாம், இரண்டாம் தவணை இறுதி முன்னேற்ற மீளாய்வுகள் திருப்திகரமாக அமையவில்லை.
+ இத்திட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கிடையில் ஒரு ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றதை அவதானிக்க முடியவில்லை.
+ ஜனவரி மாதத்தில் நிரப்பப்பட்ட படிவங்கள் டிசெம்பர் மாதத்திலோ அல்லது சம்பள உயர்ச்சிக்கான விண்ணப்பம் அனுப்பும் போது மட்டுமே மீளவும் பார்க்கப்படும் நிலையே காணப்படுகிறது.
+ பல பாடசாலைகளில் வருடம் தொடங்கி 3-4மாதங்களுக்குப் பின்னரே படிவம் பூரணப்படுத்தப்படுகிறது.
+ மொத்தத்தில் இது ஒரு சடங்காக மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தற்போது (TESP) வேலைத் திட்டத்தின் கீழ் 10/2013 சுற்றுநிருபத்தின் வழிகாட்டலில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (SBTD) ஆசிரியர் தரங்கணிப்பு தொடர்பாக புதிய முன் மொழிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை மேம்படுத்தும் விதத்தில் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. SBTD தேவைகளை இனங்காண்பதற்கு ஆசிரியர் தரங்கணிப்பு செயற்பாடுகள் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. தனியாள் ஆசிரிய விருத்திக்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளில் எல்லா ஆசிரியர்களும் வருடாந்த ஆசிரியர் நேர்காணலை தமது வரிசை நிலை முகாமையாளருடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வரிசை நிலை முகாமையாளருடன் இணக்கம் காணப்பட்ட செயன் முறைகளின்படி பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

+ விருத்தி செய்யப்படவேண்டிய பலம்
+ வழிகாட்டப்பட வேண்டிய பலவீனங்கள்
+ தனிப்பட்ட வாண்மை விருத்தித் தேவைகள்

எதிர்கால இலக்குகளில் இணக்கப்பாடு காணுதல், இலக்குகளின் அடைவு பற்றி மீளாய்வு செய்தல் என்பவற்றுடன் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்ததான தரங்கணிப்பீடு அமைய வேண்டும். ஆசிரியர்களின் பாடசாலைத் தேவையுடன் இணைந்ததாகவும் ஆசிரியர்கள் தமது பலவீனங்களையும் உள்ளார்ந்த திறன்களையும் பயிற்சிக்காக ஏனைய துறைகளையும் இனங்காண தரங்கணிப்பு உதவ வேண்டும்.

பாடசாலையில் மேற்கொள்ளப்பட இருக்கும் செயலாற்றுகைத் தரங்கணிப்பு மூன்று நிலைகளுக்கு ஊடாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

**1. ஆற்றுகைத் திட்டமிடல்**

+ ஆண்டின் ஆரம்பத்தில் பணியைப் பெற்றுக் கொள்ளும் போது ஆசிரியர்களும்- மதிப்பிடுபவரும் வேலை இலக்குகளும் எதிர்பார்ப்புக்களும் தொடர்பாகக் கலந்துரையாடல்
+ எதிர்வரும் ஆண்டுக்கான இலக்கு, எதிர்பார்க்கும் பெறுபேறு தொடர்பாக கவனம் செலுத்துதல்
+ ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகளும் அவற்றுக்குரிய இலக்கு மட்டங்களையும் வரையறை செய்தல்
+ ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தித்திட்டம்

**2. ஆற்றுகைப் பயிற்சி**

இதில் பின்வரும் விடயங்கள் இடம்பெற வேண்டும்

+ இது ஆண்டு முழுவதும் இடம் பெற வேண்டும்
+ போதுமான பின்னூட்டலை வழங்கல்
+ கற்றல்- கற்பித்தல் வினைத்திறன்கள் பற்றி கருத்துக்களை வெளியிடுதல்
+ நடு ஆண்டு மீளாய்வுச் செயற்பாடுகள்
+ உருவாக்கப்பட்ட இலக்குகள் பற்றி கலந்துரையாடி ஆற்றுகை பற்றிய பின்னூட்டல் வழங்கல்
+ வினைத்திறனை மீளாய்வு செய்து அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி கலந்துரையாடல்

**3. ஆற்றுகை தொடர்பான மதிப்பீடு**

+ ஆண்டின் இறுதியில் இது இடம் பெற வேண்டும்
+ ஆற்றுகை மதிப்பீடு தொடர்பான நேர்காணலை மேற்கொள்ளுதல்
+ ஆசிரியர்களின் உள்ளார்ந்த திறன்கள் மதிப்பீடு செய்யப்படும்
+ பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல்
+ வினைத்திறன் மிக்க மதிப்பீடு ஆசிரியர்களுக்கு வலுவூட்டலை வழங்கும்

**ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்பின் படிநிலைகள்**

**1. ஆற்றுகைத் திட்டம்**

+ இலக்குகள், குறிக்கோள்கள், பணிகள் தயாரித்தல்
+ தேவைப்படும் உதவிகள், வளங்கள், பயிற்சிகள் குறிப்பிடுதல்
+ இணக்கம் காணப்பட்டால் ஒப்பமிடல்

**2. கண்காணிப்பு**

+ வகுப்பறை நடைமுறைகளில் அவதானிப்புச் செலுத்துதல்
+ ஆசிரியர்கள்- மாணவர்கள் கலந்துரையாடல்
+ பயிற்சிக் கொப்பிகள் அவதானிப்பு, பயிற்சிப் பெறுபேறுகள் காட்சிப்படுத்துதல்
+ காலாண்டு முன்னேற்ற மீளாய்வு
+ மாணவர்களின் அடைவு மதிப்பீடு
+ இணக்கப்பாட்டுடன் செயற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளல்
+ முரண்பாடுகள் ஏற்பட்டால் தரப்படுத்துநரால் உதவி வழங்கப்படுதல்

**3. வருடாந்த ஆற்றுகை மீளாய்வு**

+ பட்டியல்படுத்தப்பட்ட அடைவுகள் (மதிப்பிடப்படுபவர்)
+ மதிப்பிடுபவரால் செய்யப்பட்ட குறிப்புரைகள்

**4. நிறுவன முன்னேற்ற மீளாய்வு (அபிவிருத்தி சார்பாக)**

+ ஆசிரியர் கூட்டம்
+ அபிவிருத்திக்காக இனங்காணப்பட்ட துறைகள்
+ அடுத்த ஆண்டில் உள்ளடக்கப்பட வேண்டிய திட்டங்கள்

**ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பில் உள்ளடக்கப்பட வேண்டியவை**

**1. கற்றல் -கற்பித்தல்**

+ கலைத்திட்ட அமுலாக்கம்
+ வினைத்திறன் மிக்க திட்டமிடல், கலைத்திட்ட ஒழுங்கமைப்பு
+ கட்புல- செவிப்புல உபகரணங்கள் தயாரித்தல்
+ பாட வேளைகளில் கற்பித்தல்
+ பரிகார வகுப்புக்கள்
+ பாடசாலை மட்டக் கணிப்பீட்டை வினைத்திறனுடன் மேற்கொள்ளல்

**2. மாணவர் நலனும் வழிகாட்டலும்**

+ தனிப்பட்ட மாணவர் தேவை
+ குழுவாக மாணவர் அபிவிருத்தி
+ மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டு நலம்
+ ஆலோசனை அறிவுரை வழங்கல்

**3. இணைப் பாடவிதான செயற்பாடுகள்**

+ ஒத்துழைப்பு வழங்குதல்
+ கற்றல்- கற்பித்தல் செயன்முறையுடன் இணைப் பாடவிதான்த்தை இணைத்தல்
+ தலைமைத்துவம்

**4. பாடசாலை சமூக உறவுகள்**

+ பெற்றோர், சமூகம் பங்குபற்றலை அதிகரித்தல்
+ பிள்ளைகள் முன்னேற்றம் பற்றி பொறுப்புகள்கூறல்
+ பாடசாலை- சமூகம் அபிவிருத்தி இணைப்புச் செய்தல்

**5. பாடசாலைக்கான விசேட சேவைகள்**

+ பொருத்தமான வேறு கடமைகளும் செயற்பாடுகளும்
+ மாணவர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்கான மேம்பாட்டு நடவடிக்கைகள்

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தின் (SBTD) தேவைகளை இனங்காண்பதற்கு ஆசிரியர் தரங்கணிப்பை துணையாகக் கொள்ளலாம். ஆசிரியர்களை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கும் இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம். இப்பொழுது நடை முறையிலுள்ள தரங்கணிப்புப் படிவங்கள் உரிய வகையில் பூரணப்படுத்தப்படாமலும் உரிய காலங்களில் கண்காணிக்கப்படாமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் படிவம் நிரப்பப்பட்டால் டிசெம்பர் மாதம் அப்படிவம் மீளவும் எடுக்கப்பட்டு சம்பள உயர்வுக்காக ஒரு அடிப்படையாக மட்டுமே கொள்ளப்படுகிறது. ஏனைய நோக்கங்கள் நிறைவேறியதாகக் காணப்படவில்லை.

புதிய கட்டமைப்பு மாற்றங்களில் (SBTD) முதன்மைப்படுத்தப்படுகிறது. இங்கு தரங்கணிப்பு செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவ்து முக்கியமானதாகும்.

கற்றல், கற்பித்தல், முகாமைத்துவ பங்குபற்றல் ஆகியவற்றோடு சுயமாக முன்வந்து செயற்படும் தன்மை என்பவற்றை மேம்படுத்த ஆசிரியர் தரங்கணிப்பை வலுப்படுத்த வேண்டும்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைமுகாம் அமைந்த நிலங்களை நாம் மீட்டெடுத்து வருகின்றோம்

## சந்திரகுமார் எம்.பி.பெருமிதம்

(கண்டாவளை)

படைமுகாம்கள் அமைக்கப்பட்ட பிரதேசங்களை மீட்டு மக்கள் பாவனைக்காக மாற்றும் செயல் திட்டங்களைநாம்முன்னெடுத்துவருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டாவளை வெலிகண்டல் சந்திக்கண்மையில் அமைந்துள்ள பனை வெல்ல உற்பத்தி நிலைய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிளிநொச்சி அறிவியல் நகர் கிராமத்தில் படைமுகமாகக் காணப்பட்ட 567 ஏக்கர் நிலப்பரப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இராஜதந்திர செயற்பாடுகள் மூலம் பல்கலைக்கழக விவசாய பீடமாக மாற்றியமைத்துள்ளார்.

அதேபோன்று இன்றைய தினம் படை முகாமாகக் காணப்பட்ட மற்றுமொரு இடத்தை கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு சங்கத்தின் வெல்ல உற்பத்தி நிலையமாக மாற்றியமைத்துள்ளார்.


இதன் காரணமாக 555 அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடியதாகவுள்ளது.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த நிலையில் மீளக்குடியேற்றப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் காணப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை பனை உற்பத்தி ஊடான திட்டத்தினால் மேம்படுத்தவும் மற்றும் பதநீரை விரயமாக்காமல் எதிர் வரும் காலங்களில் வடிசாலைகளின் ஊடாக ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்வதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம் என்றும் தெரிவித்தார்.

யு.என்.டி.பி. நிறுவன நிதியுதவியுடன் 15 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மேற்படி பனை வெல்ல உற்பத்தி நிலையமானது நேற்று முன்தினம் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன், வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் எனப் பலர் கலந்து கொண்டனர். (263)

# பளைப் பகுதியில் விபத்து; ஏழு பேர் படுகாயம்



பளைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை சிறிய ரக ஜீப் வண்டியும் ஹயஸ் வானும் மோதியதில் 7 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹயஸ் வானும் கொக்கிராவு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சிறிய ரக ஜீப் வண்டியும் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளையே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான க.இராஜேந்திரம் (வயது 67), இ.ஸ்ரீநந்தலாதேவி (வயது 63), எஸ். யேசுதாஸன் (வயது 50), த.சுகந்தன் (வயது 30) மற்றும் உரும்பிராயைச் சேர்ந்த இ.விக்னேஸ்வரன் (வயது 70), இன்பருட்டி யைச் சேர்ந்த நிமல் செல்ரன் (வயது 49), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் முத்தாலிப் (வயது 53) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன் இரண்டு வாகனங்களும் பலத்த சேதங்களுக்கு உட்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த 7 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (29)

# குமுழமுனை கிராமத்திற்கு புதிய வைத்தியசாலை



வடமாகாணசபை நிதி ஒதுக்கீட்டில் 11 மில்லியன் ரூபா பெறுமதியில் ஒரு புதிய வைத்தியசாலை அமைக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று குமுழமுனை கிராமத்தில் வடமாகாணசபை உறுப்பினர்கள் வைத்திய கலாநிதி ச.சிவமோகன் மற்றும் து.ரவிகரன் ஆகியோரின் இணை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உடன் வைத்தியசாலை அமைப்பது சம்பந்தமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

குமுழமுனை நகர மத்தியில் அமைந்துள்ள காணியை, வைத்தியசாலைஅமைப்பதற்கு உகந்தது என மக்களின் ஏகோபித்த முடிவுடன் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேற்படி காணியை துப்புரவு செய்து கனரக வாகனங்களின் உதவியுடன் மட்டப்படுத்தும் வேலைகளை பொதுமக்கள் சார்பில் குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்கங்களால்பொறுப்பேற்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராமமானது இன்று வரை வைத்தியசாலை வசதிகளின்றி சிரமப்பட்டு வருவது தெரிந்ததே.

மேலும் இக்கூட்டத்தில், வீதி அபிவிருத்திகளும் முக்கியமாக முள்ளியவளை-குமுழமுனை வீதி உடன்திருத்தம் செய்யப்பட வேண்டிய ஒருஅவசிய தேவையுள்ளது என்றும உணரப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், நிறைவேற்று பொறியியலாளர் மற்றும் கிராம சேவையாளர், கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6)

# வலம்புரி செய்தியை அடுத்து கொல்களம் இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பழைய சந்தைக்கு பின்புறமாகவுள்ள பகுதியில் இதுவரைகாலமும் இறைச்சிக்காக மாடுவெட்டிய கொல்களம் நேற்று தொடக்கம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குடியிருப்பு பகுதிகளின் மத்தியில் மாடு வெட்டப்படுவதால் மக்கள் அசௌகரியம் எனும் தலைப்பில் கடந்த மே மாதம் 13 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளிவந்த செய்தியை அடுத்து குறித்த மாடு வெட்டும் கொல்களத்தை பரந்தன் ஓராம் கட்டையிலுள்ள சுடலைக்கு நேற்று இடம்மாற்றியுள்ளனர்.

இதன்காரணமாக, இதுவரை காலமும் பாரிய சுகாதார சீர்கேட்டுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வந்த குறித்த பகுதி மக்கள் தற்போது மகிழ்ச்சி அடைந்ததுடன் இக் கொல்களம் இடமாற்றத்திற்கு காரணமாகவிருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர். (271)

# புதூர் நாகதம்பிரானில் நீர் சொட்டும் அதிசயம்

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வசந்த மண்டபத்தின் மேற்பகுதியிலிருந்து நீர் வடிந்து வருவதாக அடியார்களால தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக வசந்த மண்டபத்தின் மேற்பகுதியில்- நாக சிலை வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு கீழாக ஒரு வகை நீர் சொட்டிக் கொண்டுள்ள நிலையில் தற்போது அங்கு பக்தர்கள் அதிகளவில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இந் நிலையில் இப் பகுதியில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெற்று வருகிறன.

இதேவேளை இந் நீர் சொட்டும் பகுதியில் வெள்ளை நிறத்தில் மா தன்மையான ஒரு பொருள் காணப்படுவதோடு- நீர் கீழே விழும் இடம் வெண்ணிறமாக மாறி வருகின்றமையும் இந்த நீர் வழிந்து செல்லும் போது வர்ணம் பூசப்பட்ட பகுதிகளில் வர்ணம் அழிந்து செல்வதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இடம்பெறவுள்ள நிலையில் இவ் அதிசயம் நிகழ்ந்துள்ளது.

மிகவும் வெப்பமான காலநிலை காணப்படும் இந்த காலகட்டத்தில் வசந்த மண்டபத்தின் மேற்பகுதியிலிருந்து இவ்வாறு நீர் சொட்டுவதானது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவர் க.கிருபாகரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (250)




# மிளகாயின் விலை திடீர் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சந்தைகளில் பச்சை மிளகாயின் விலை திடீரென சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக 160 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்கப்பட்ட பச்சை மிளகாய் தற்போது சடுதியாக 300 ரூபா வரை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



வடமாகாண திட்டமிடல் குழுக் கூட்டம் வவுனியா உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி தலைமையில் நேற்று நடைபெற்ற போது, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக் செல்ல வேண்டாம்

### இந்திய மத்திய அரசு வேண்டுகோள்

(புதுடில்லி)

ஈராக்கில் உள்நாட்டு போர் நடப்பதால் அந்த நாட்டுக்கு செலவதை தவிர்க்கும்படி இந்தியர்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

ஈராக் நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத படையினருக்கும், அரசாங்க படையினருக்கும் இடையே கடுமையான போர் மூண்டுள்ளது.

தீவிரவாதிகள் பக்தாத் நகரத்தை நோக்கி முன்னேறி கொண்டிருப்பதால் அங்கு உணவு பொருட்களின் விலைகள் முன்பு எப்போதும் இல்லாத அளவில் கடுமையாக அதிகரித்து உள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

பக்தாத் நகரிலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்தியர்கள் பலர் வசிக்கின்றனர்.

இந்தியர்கள் உடனடியாக வர்த்தக போக்குவரத்து துறைகள் மூலம் அந்த நாட்டை விட்டு வெளியேற விரும்பினால் அது மிகவும் பாதுகாப்பானது என்று இந்திய வெளியுறவுத் துறை அறிவுறுத்தியுள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை இந்தியாவில் இருந்து யாரும் ஈராக் நாட்டுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் மத்திய வெளியுறவுத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், ஈராக்கில் ஆயுதப் போர்நடைபெற்றுவரும்பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் முடிந்தவரை வீட்டை விட்டு வெளியில் வரவேண்டாம் என்றும், வீடுகளுக்கு உள்ளேயே பாதுகாப்பாக தங்கியிருக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

# ஈராக் இராணுவத்தினரும் ஆதரவாளர்களும் சன்னி தீவிரவாதிகளால் படுகொலை

(பக்தாத்)

ஈராக்கில் சன்னி முஸ்லிம் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த அந்நாட்டு இராணுவ வீரர்கள் மற்றும் இராணுவத்திற்கு ஆதரவாக இருந்த ஷியா பிரிவினர் ஒட்டுமொத்தமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர்பக்தாத்தைநோக்கி சன்னி பிரிவு தீவிரவாதிகளின் முன்னேற்றத்தை ஈராக் நாட்டு இராணுவம் ஷியாப் பிரிவு முஸ்லிம்களின் துணையுடன் தடுத்து நிறுத்தியுள்ளது.

இதன்காரணமாகவே, தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த இராணுவ வீரர்களையும்ஷியாப பிரிவினரையும் சர மாரியாக சுட்டுக்கொன்றுள்ளதாக அறிய முடிகிறது.

ஈராக்கில், ஷியா பிரிவினர் ஆதரவுடன்இராணுவத்துக் கும் சன்னி பிரிவினருக்கும் இடையே நடைபெறும் மோதல தீவிரமடைந்துள்ளது.

பிடிபட்ட இராணுவ வீரர்கள்



மற்றும் ஷியா பிரிவினரை, சன்னி பிரிவு தீவிரவாதிகள் ஒட்டுமொத்தமாக சுட்டுக் கொன்ற இச் சம்பவம் உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் ஜனாதிபதி சதாம் உசேனின் வீழ்ச்சிக்கு பிறகு, ஷியா பிரிவு தலைவர்களிடம் ஆடசியை ஒப்படைத்து விட்டு அமெரிக்க இராணுவம் வெளியேறியது.

தற்போது சதாம் உசேனின் ஆதரவாளர்களான சன்னி பிரிவினரின் கை மீண்டும் ஓங்கியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எல் (இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் அண்டத லெவன்ட்) என்ற படையை உருவாக்கி ஆயுதம் ஏந்தி போராடுகின்றனர்.

மொசுல், திக்ரித் உட்பட பல் வேறு நகரங்களைக் கைப்பற்றிய சன்னி பிரிவினர் தலைநகர் பக்தாத் நோக்கி முன்னேறினர்.

அதைப் கைப்பற்ற விடாமல் தடுக்க ஷியா பிரிவினர் ஆதரவுடன் இராணுவம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மோசூலுக்கு மேற்கே உள்ள தல்அஃபார் நகரில் இரு தரப்புக்கும் இடையே கடுமை யான பீரங்கி தாக்குதல் நடை பெறுகிறது.

இராணுவத்தினரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியபடி சன்னி பிரிவினர இங்கு முன்னேறி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பக்தாத் நகரை தீவிரவாதிகள் கைப்பற்றும் முயற்சியை இராணுவம் தடுத்தி நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் மற்றும் ஷியா பிரிவினரை, சன்னி பிரிவினர் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் பிரச்சினையில் மீண்டும்தலையிட்டு, மீண்டும் இராணுவத்தை களம் இறக்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விரும்பவில்லை.

இருந்தாலும் விமான தாக்குதல் நடத்தலாமா என்பது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் அமெரிக்க போர க்கப்பல் ஒன்று வளைகுடா பகுதிக்கு செல்ல உத்தர விடபபட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

## வாக்களித்தவர்களின் விரல்கள் துண்டிப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் விரல்கள் தலிபான் தீவிரவாதிகளினால் துண்டிக் கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.

தேர்தலில் பொதுமக்கள் வாக்களிக்கக் கூடாது என தலிபான் தீவிரவாதிகள்மிரட்டல் விடுத்தனர்.

அதையும்மீறி பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

இதனால்தலிபான் தீவிரவாதிகள் கடும் ஆத்திரம் அடைந்ததுடன் தங்களது எச்சரிக்கையையும் மீறி எப்படி வாக்களிக்கலாம் என பொதுமக்களை மிரட்டினர்.

பின்னர் 11 முதியவர்களின் கை விரல்களை வெட்டி துண்டித்தனர்.

இந்த தகவலை ஆப்கானிஸ்தான் உள்துறை மந்திரி ஆயூப் சலாங்கி தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் ஆட்சி மாற்றம் பூட்டானுடனான உறவை பாதிக்காது

### பூட்டான் பாராளுமன்றில் நரேந்திர மோடி

தெற்காசியாவில் இந்தியா வலுவுடன் திகழ்வது அயல் நாடுகளுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ளது என இந்தியப் பிரதமர் நரேந்தர மோடி தெரிவித்துள்ளார்.

பூடடான் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் பயணமாக பூட்டான் சென்றுள்ள நரேந்திர மோடிக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று பூட்டான் பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது,

பூட்டான் நாடாளுமன்ற கூட்டுக கூட்டத்தில் உரையாற்றுவது பெருமை அளிக்கிறது. இந்தியா - பூட்டான் உறவு வலுவான கலாசார அம்சங்களை கொண்டுள்ளது.


இந்தியாவில் ஆட்சி மாற்றத்தால் ஏற்கனவே உள்ள உறவு பாதிக்கப்படாது. மேலும் பூட்டான நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பேசுவதை அதிர்ஷ்டமாக கருதுகிறேன் என்றார்.

எரிசக்தி துறையில் தன்னிறைவு காண்பதில் எதிர்காலத்தில பெரும் சவாலாக இருக் கும். இதனால் எரிசக்தி பாது காப்பை மேம்படுத்த நாடுகள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

மேலும் தெற்காசியாவில் இந்தியா வலுவுடன் திகழ்வது அண்டை நாடுகளுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ளது.

ஜனநாயகத்தின் மதிப்பை உணரந்து பூட்டான் மன்னர் செயறபடுவது பெருமையளிக்கிறது. அடித்தட்டு மக்களின் உரிமையை மன்னர் குடும்பம் பேணி பாதுகாப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

அண்டை நாடு நல்ல நாடாக அமைந்தால் மட்டுமே நாட்டில்




மகிழச்சி நிலவும் இந்தியாவில் பயிலும்பூட்டான் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை இரட்டிப்பாக்கப்படும் அதற்காக 2 கோடி ரூபா ஒதுக்கப் படும் என்று கூறினார்.

அததுடன் பூட்டான் இளைஞரகள் பயன் அடைவதற்காக டிஜிட்டல் நூலகம் அமைக்க இந்தியா உதவும் என்றும் கூறினார்.

அதனை தொடர்ந்து இந்திய நிதி உதவியுடன் கட்டப்பட்டுள்ள பூட்டான் உச்சநீதிமன்ற கடடடத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்திய நிதி உதவியுடன் தொடங்க இருக்கும் புதிய நீர்மின் திட்டத்திற்கு மோடி நேற்று அடிக் கல் நாட்டினார்.

# அத்துமீறலை நிறுத்தினால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு தொடரும்

### பாதுகாப்புத்துறை அமைச்சர் திட்டவட்டம்



(ஸ்ரீநகர்)

எல்லைப் பகுதியில் அத்துமீறல்களை நிறுத்தினால் மட்டுமே பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இந்திய மத்திய நிதி மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜம்மு-காஷ்மீர மாநில தலைநகர் ஸ்ரீநகரில் நேற்றுமுன் தினம் செய்தியாளர்களிடம கூறியதாவது,

தற்போது பாகிஸ்தானுடன் இந்தியா அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துமா? எனக் கேட்கிறீர்கள். நிச்சயம் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது.

எல்லையில் அத்துமீறல்கள் மற்றும்ஊடுருவல்கள்தொடரந்தால், இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதில் பயனில்லை.

எல்லைப் பகுதியில் எத்தகைய அத்துமீறல்கள் நடைபெற்றாலும் அவற்றை முறியடிக்க நமது வீரர்கள் முழு அளவில் தயாராக இருக்கின்றனர். நமது வீரர்களின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் உள்ளன.

ஆயுதப் படையினர் மற்றும் உள்ளூர் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பிட்ட காலத்துக்கு மாநிலத்தின் பாதுகாப்பு நிலைமை ஆராயப்படும்.

இந்தியாவில் புனிதப் போர் நடத்த முஸ்லிம்களுக்கு அல்-கொய்தா பயங்கரவாத அமைப்பு அழைப்பு விடுத்திருப்பது பற்றிய கேள்விக்கு பதில் அளித்த அவர, "இந்தியாவில் அமைதி நிலவுவதை அல்கொய்தா போன்ற தீய எண்ணம் கொண்ட சக்திகள் விரும்பவில்லை. அதேசமயம் எத்தகைய சக்தியாலும் நாடடில் அமைதியை சீர்குலைக்க முடியாது. எத்தகைய சவால் களையும் முறியடிக்கும் சக்தி நாட்டுக்கு உள்ளது" என்று கூறினார்.

ஜம்மு-காஷ்மீர் நிலவரம் குறித்து ஆராய்வதற்காக இராணுவ தலைமைத் தளபதி விக்ரம் சிங்குடன், ஸ்ரீநகருக்கு அருண் ஜெட்லி கடந்த சனிக்கிழமை சென்றார்.

ஸ்ரீநகரில் இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அவர், எல்லைப் பகுதியை ஒட்டிய உரி உள்ளிட்ட இடங்களுககு சென்று, இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களுடன் கலந்துரையாடினார்.

# வியட்நாமின் எதிர்ப்பை மீறி பாடசாலை கட்டுகிறது சீனா

இராணுவ அதிகாரிகளின குழந்தைகளுக்காக, தென் சீன கடலில் யாங்ஷிங் தீவில் ஒரு பாடசாலைக் கட்டும் பணியை சீனா ஆரம்பித்துள்ளது.

தங்களுக்குச் சொந்தமானது என்று வியட்நாம் கூறி வரும் யாங்ஷிங் தீவில் உள்ள சான்ஷா நகரில் தான் சீன அரசு, தற்போது பாடசாலை கட்டும் பணியை ஆரம்பித்திருக்கிறது.

அதில ஆரம்பப் பாடசாலையும், பாலர் பாடசாலையும் கட்டப்பட்டு வருகின்றன.

யாங்ஷிங் தீவில் பாடசாலை செல்லும் வயதில் 40 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இருப்பதால், அவர்களுக்காக இந்தப் பாடசாலை கட்டப் படுகின்றது.

யாங்ஷிங் தீவை, பாராசீல் தீவு என்று பெயரிட்டு வியட்நாம் அரசு ஏற்கனவே உரிமை கொண்டாடி வருகிறது.

தென் சீனக் கடல் பகுதியில், சீன அரசு கடந்த மாதம் எண்ணெய்க் கிணறு அமைக்கும் பணியை ஆரம்பித்தபோது, சீனர்களுக்கு எதிராக வியடநா மில் கலவரம் மூண்டது.

இதில், 4 சீனர்கள் உயிரிழந்தனர். ஏராளமானோர் சீனாவுக்குத் திரும்பினாரகள்.

சீன கடற்பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்கள், வரலாற்று ரீதியில் தங்களுக்குச் சொந்தமானவை என்று சீனா உறுதியாகக் கூறி வருகிறது.

அதற்கு, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே, தாய்வான் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மேலும் சர்ச்சைக்குரிய பகுதிகளில் சீனா தங்களது இராணுவ பலத்தை அதிகரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருவன் புத்திசாலியா? முட்டாளா? என்று கண்டு பிடிக்க அவனை ஐந்து நிமிடம் பேசவிடு

– ஓர் அறிஞன்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# பொது பல சேனாவை வழிநடத்துவது அரசாங்கப் புலனாய்வுப் பிரிவினரே

## மங்கள எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசப்பற்று என்ற விடயத்தை முன்னிறுத்தி சிங்கள இனவாத வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கவரும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதே வேலை தெரியாத அரசாங்கத்தின் ஒரே தந்திரோபாயம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்காக தர்மத்தை போதிப்பதற்கு பதிலாக பகையை தூண்டும் காவியுடை அணிந்த பொறுக்கிகளை பயன்படுத்தி அரசாங்கம் இனவாதத்தை தூண்டி வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது பல சேனா என்ற அமைப்பு அரச பாதுகாப்பின் கீழ், அளுத்கம மற்றும் பேருவளை நகரங்களில் மூன்று பேரை கொலை செய்து, பாடசாலைக்கு செல்லும் சிறுவனின் காலை உடைத்து, கடைகள் மற்றும் வீடுகளை தீயிட்டுள்ளது.

பொது பல சேனா அமைப்பு என்பது அரச புலனாய்வுப் பிரிவினரால் வழி நடத்தப்படும் அமைப்பாகும். அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் என்பவர் பௌத்த பிக்குவா என்பது சந்தேகத்திற்குரியது.

அரச புலனாய்வுப் பிரிவினரால் வழி நடத்தப்படும் நபர்களின் பெயர் பட்டியல்களை எதிர்வரும் நாட்களில் ஊடகங்களுக்கு தரப்படும். புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களும் பொது பல சேனா அமைப்பில் இருக்கின்றனர்.

அளுத்கமவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இனவாத யுத்தம் பதுளை வரை பரவியுள்ளது. பதுளை நகரில் இதுவரை மூன்று கடைகள் தீயிடப்பட்டுள்ளன.

தாக்குதல் நடத்தியவர்களுக்கு அங்கு சென்ற பாதுகாப்பு தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கினர். அவர்கள் அதனை தடுக்க முயற்சிக்கவில்லை.

பொது பல சேனா அமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்தை போல் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமோ ஐக்கிய தேசியக்கட்சியோ நடத்தியிருந்தால், அதனை அடக்கி ஒடுக்கியிருப்பார்கள்.

இதனால், இது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை பெறுவதற்காக அதிரடிப்படையினரின் உதவியுடன் அரசாங்கம் நடத்திய இனவாதம் யுத்தம் என்பது தெளிவாகியுள்ளது என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். (செ-11)

## சிங்கள-முஸ்லிம் பிரச்சினை

# தீர்வு காணும் கூட்டத்தை புறக்கணித்த அமைச்சர்கள்

(கொழும்பு)

சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக களுத்துறையில் நேற்று நடைபெற்ற முக்கியமான கூட்டத்தில் அந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் முக்கியமான மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, ராஜிதசேனாரட்ன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பிரதமர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களைத் தவிர பொதுபல சேனா அமைப்பின் பிரதிநிதிகளும் முஸ்லிம் சமூக பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அமைச்சர் மகிந்த சமரசிங்க, மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி என்பதுடன், அவர் ஜெனிவா மனித உரிமை பேரவையில் நடைபெற்ற கூட்டங்களில் தொடர்ச்சியாக கலந்து கொண்டுள்ளார்.

நாட்டில் வளர்ந்து வரும் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான வெறுப்புணர்வுகள் தொடர்பாக அண்மைய மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் பேசப்பட்டதுடன் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் அது பெரும் செல்வாக்கு செலுத்தியது.

அதேவேளை அமைச்சர் ராஜித சேனாரட்ன பொது பல சேனாவின் செயற்பாடுகளை அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், பொதுபல சேனாவுக்கு அரசாங்கத்தில் உள்ள சக்திகள் ஆதரவு வழங்கி வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், களுத்துறை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் பங்கேற்காதது குறிப்பிடத்தக்க விடயமாகும். (செ-11)

# விமலின் சத்திரசிகிச்சையும் எங்களின் அறுவைச்சிகிச்சையும்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் விமல் வீரவன்ச குருநகரில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, சத்திர சிகிச்சை செய்தால் இரத்தம் வழிந்தோடத்தான் செய்யும் என்று கூறியுள்ளார்.

சத்திரசிகிச்சை செய்தால் இரத்தம் வழிந்தோடத் தான் செய்யும் என்பது உண்மையாயினும் வழிந்தோடிய இரத்தத்தை ஈடுசெய்வது சத்திரசிகிச்சை செய்த டாக்டரின் கட்டாயக் கடமை என்பதை அமைச்சர் விமல் வீரவன்ச மறந்து போயுள்ளார்.

அதேநேரம் சத்திரசிகிச்சை செய்யப்பட்டவர் நோயாளி என்ற அடிப்படையில் அவருக்கான கண்காணிப்புகள், அவருக்குத் தேவையான உதவிகள், பொருத்தமான உணவுகள் என்பன வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அவர் பூரண சுகம் அடையும் வரை அவருக்கான அத்தனை சுகாதார வசதிகளையும் செய்து கொடுப்பதும் அவசியமாகும்.

அந்த அடிப்படையில் சத்திரசிகிச்சை செய்தால் இரத்தம் வழிந்தோடத்தான் செய்யும் என்று கூறிய அமைச்சர் விமல் வீரவன்ச, சத்திரசிகிச்சைக்குப் பின்பான பராமரிப்புப் பற்றியோ அல்லது பராமரிப்புச் செய்யாமல் விட்டால் நோயாளிக்கேற்படும் ஆபத்துப் பற்றியோ அவர் பிரஸ்தாபிக்காமல் விட்டமை அவரிடம் இருக்கக் கூடிய இனவாத சிந்தனையை எடுத்துக் காட்டுவதாகும்.

தமிழர் ஒருவருக்கு சிங்கள டாக்டர் சத்திர சிகிச்சை செய்தால், சிங்கள டாக்டர் ஒருவர் தமிழரை வெட்டி விட்டார் என்று கூறுவது எவ்வளவு தவறானதென்றும் அமைச்சர் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

அமைச்சரின் இனவாதப் போக்குகள் தமிழர்களுக்குப் புதியவையல்ல. எனினும் அவர் கூறிய உதாரணத்திலிருந்து அவருக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் தமிழ் மக்களுக்கு இருக்கவே செய்கிறது.

அந்த அடிப்படையில் சத்திரசிகிச்சை செய்தால் இரத்தம் வடிந்தோடுவது எவ்வளவு உண்மையோ அதுபோல ஒரு மனித உடலில் தேவையற்ற கட்டிகள், உபத்திரமான தளும்புகள், ஒட்டிப் பிறந்த தேவையற்ற உறுப்புகள் என்பவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றவேண்டும் என்பதையும் அவ்வாறான அறுவைச்சிகிச்சை அவசியமானதென்பதையும் அமைச்சர் வீரவன்ச உணர்ந்தாக வேண்டும்.

இத்தகையதொரு அறுவைச்சிகிச்சை தமக்குக் கட்டாயம் தேவையெனத் தமிழ் மக்கள் உணருகின்றனர். அத்தகையதொரு சிகிச்சைக்காக் இரத்தம் சிந்துவது கூட தவறாகாதென்பதே தமிழ் மக்களின் தீர்க்கமான முடிவாக இருந்தது.

எனினும் தமிழர்கள் மேற்கொண்ட அறுவைச் சிகிச்சை சிலபல காரணங்களால் வெற்றியளிக்கவில்லை. அதற்காக அவர்கள் இன்னொரு தடவை தமக்கு அறுவைச்சிகிச்சை செய்து தேவையற்ற பாகத்தை அகற்றித் தாம் பூரண சுதந்திர மனிதராக இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறென்றோ அல்லது அவ்வாறு நினைக்கக் கூடாதென்றோ எவரும் கருத முடியாது.

உள்ளூரில் நடந்த அறுவைச்சிகிச்சை பலனளிக்கவில்லையாயின் சர்வதேச டாக்டரின் உதவியுடன் அறுவைச்சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் தமிழர்களுக்கு உரிமை உண்டு.

இந்த உரிமையை பெற்றுக்கொள்வதற்காக அண்டை நாட்டில் இருக்கும் எங்கள் பெரியம்மாவின் உதவியை பெறுவதையும் எவரும் தடுக்க முடியாது – தவிர்க்க முடியாது.

ஆக, சத்திரசிகிச்சையில் இரத்தம் வடிந்தோடும். ஆனால் அறுவைச்சிகிச்சையில் தேவையற்ற பாகங்கள் வெட்டிக்கழிக்கப்பட, நிம்மதியான வாழ்வு கிட்டும் என்ற உண்மையையும் அமைச்சர் விமல் வீரவன்ச காலம் கடந்தேனும் உணருவார் என்பது உறுதி.

# குரோத எண்ணங்களை தூண்டி வன்முறையை ஏற்படுத்த முயற்சி

## மாதுளுவாவே சோபித தேரர் கவலை

(கொழும்பு)

நாட்டின் சில இடங்களில் குறிப்பாக அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளதாக மாதுளுவாவே சோபித தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் குரோதமான எண்ணங்களை தூண்டி நாட்டில் வன்முறைகளை ஏற்படுத்த முயற்சிக்கும் குழுக்களிடம் சிக்காது நாட்டில் அமைதியையும் சமய சகவாழ்வையும் நல்லிணக்கம் தொடர்பிலும் ஆழ்ந்த கவனத்தை செலுத்துமாறு இலங்கை வாழ் மக்களிடம் மிகவும் அக்கறையுடன் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிகப்பட்டுள்ளதாவது, இலங்கை மிக நீண்ட காலமாக இன மோதல்களில் சிக்கி மிகவும் பாதிப்புகளை அனுபவித்து, மிகவும கசப்பான அனுபவங்களை கொண்ட நாடு.

இதன் காரணமாக நாட்டில் வாழும சிங்கள, தமிழ், முஸ்லிம் என சகல மகளும் கொடுமையானதும் துரதிர்ஷ்ட வசமானதுமான அனுபவங்களை கவனத்தில் கொள்ளும் போது முழு நாடும் பல வருடங்கள் பின்நோக்கி தள்ளப்பட்டது. நாடு என்ற வகையில் கௌரவமாக அந்த நிலைமையில் இருந்து மீண்டெழ வேண்டும் என்றும் நாம் முயற்சித்து வருகின்றோம்.

இப்படியான பின்னணியில் நாட்டின [illegible]

ரீதியான மோதல்களை ஏற்படுத்த சில அடிப்படைவாத சக்திகள் முயற்சித்து வருவதுடன் நாட்டின் ஐக்கியத்திற்கான எதிர்பார்ப்புகளுக்கு முரணாக நாட்டை மீண்டும் அராஜக நிலைக்கு தள்ள முயற்சித்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

எந்த தரப்பில் இருந்து மேலேழும் அடிப்படைவாத செயற்பாடுகளாக இருந்தாலும் அது நாட்டுக்கு பாரதூரமான பிரதிபலன்களையே ஏற்படுத்தும்.

அத்துடன் இந்த நடவடிக்கையானது நாட்டின் எதிர்கால சந்ததிக்கு செய்யும் பாரதூரமான துரோகமாகும் எனவும் மாதுளுவாவே சோபித தேரர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் யூலை மாதம் 2ஆம் திகதி புதன் கிழமை இரவு 7.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் வியா ழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

திருவிழாக் காலத்தில் தினமும் காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வருவார்.

மாலை 7.00 மணிக்கு வசந்த மண்டவப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். (செ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## மன உறுதியை இழக்காதீர்!



- அறிவார்ந்து சிந்திக்கும்போது தான், பிழைகளை நம்மால் அகற்ற முடியும்.
- ஞானம் புறவுலகில் இருந்து வருவது இல்லை. இயல்பாகவே மனிதனுக்குள் எப்போதும் இருக்கிறது.
- மனஉறுதியை எப்போதும் இழக்கக் கூடாது. ஏழை, எளியோரின் மருந்து அது ஒன்றே.
- எல்லாருக்கும் இன்பம் அளிக்கும் ஒரே மாதிரியான பொருள் உலகில் இல்லவே இல்லை.
- தோல்வி இல்லாத வாழ்வால் பயன் உண்டாகாது. வாழ்வின் சுவையே போராட்டத்தில் தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய போட்டிகள்



சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ள போட்டிகள் வருமாறு,

மாலை 5.50 மணிக்கு வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆதவன் பீ விளையாட்டுக்கழகமும் மாலை 6.30 மணிக்கு கலைமகள் பீ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் வெள்ளை விளையாட்டுக்கழகமும் இரவு 7.10 மணிக்கு காந்திஜி ஏ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (சு-23)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க அனுமதியுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இர ண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி உடுவில் சிந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறை அணி மோதவுள்ளது. இறுதிப் போட்டி 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (சு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வங்கிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி; இலங்கை வங்கி அணி சம்பியன்



வடமராட்சி வங்கிகளின் சங்கத்தினால், வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள வங்கிகளுக்கிடையில் முதன்முறையாக நடத்தப்பட்ட 5 பந்துபரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணிக்கு 6 பேர் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் வடமராட்சி இலங்கை வங்கி அணி சம்பியனாகியது.

இறுதிப்போட்டியில் கொமர்ஷல் வங்கியினை 4 இலக்குகளால் வென்றே இலங்கை வங்கி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியில் வடமராட்சிப் பிரதேசத்தினைச் சேர்ந்த 11 வங்கிகளின் அணிகள் பங்குபற்றியிருந்ததுடன். போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றன.

அரையிறுதிப் போட்டியில் கொமர்ஷல் வங்கி அணி தேசிய சேமிப்பு வங்கியினையும், இலங்கை வங்கி அணி செலான் வங்கி அணியினையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை வங்கி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதற்கிணங்கக் களமிறங்கிய கொமர்ஷல் வங்கி அணி, 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 1 இலக்கினை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் து.துவாரகன் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

65 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை வங்கி அணி 3.1 பந்துபரிமாற்றங்களில் 1 இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஆ.நிரோஷன் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இறுதிப்போட்டியில் ஆட்டநாயகனாக இலங்கை வங்கி அணித் தலைவர் ஆ.நிரோஷனும், சுற்றுப் போட்டியின் தொடரின் ஆட்டநாயகனாக கொமர்ஷல் வங்கியின் சு.கிரிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிகள் மற்றும் சிறந்த வீரர்களிற்கான பரிசில்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடப் பேராசிரியர் நா.நடராஜசுந்தரம் வழங்கினார். (சு)


# சம்பியனாகியது அராலி விளையாட்டுக் கழகம்













வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் சர்வதேச காற்பந்து போட்டியினையொட்டி லீக்கிற்குட்பட்ட 40 வயதிற்கு மேற்பட்ட காற்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அராலி விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டி இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் அராலி விளையாட்டுக் கழக அணியினை எதிர்த்து இளவாலை ஹென்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் அராலி அணியினைச் சேர்ந்த கே.ரவி மற்றும் எஸ்.ஜெயக்குமார் ஆகியோர் தலா ஒரு கோல் பெற்றுக்கொடுக்க முதல் பாதியாட்டத்தில் அராலி அணி 2:0 என்ற நிலையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் அணிக்கு கிடைத்த தண்டனை உதை வாய்ப்பினை அவ்வணி வீரன் கே.தணேஸ்வரன் கோலாக்கினார். அதே உத்வேகத்துடன், தணேஸ்வரன் தனது அணிக்கான இரண்டாவது கோலினையும் பெற்றுக்கொடுத்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பு நிலையினை அடைந்தது. இந்நிலையில் ஆட்டத்தின் இறுதிநேரத்தில் அராலி அணியின் வீரன் என்.சுதர்சன் தனது அணிக்கான வெற்றிக்கோலினை அடிக்க, இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் அராலி அணி வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்களை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபரும் முன்னாள் காற்பந்தாட்ட வீரருமான அருட்தந்தை அ.யேசுதாசன் அடிகளார் வழங்கினார்.

# சாவற்கட்டு மகாத்மா வி.கழகத்தின் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இப் போட்டிகள் அணிக்கு 5 பேர் கொண்டவையாக மின்னொளியில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற போட்டி முடிவுகள் வருமாறு.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் மாதகல் சென் தோமஸ யுத விளையாட்டு கழகமும் அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகமும மோதிய போட்டி 1:1 என சமநிலையில் நிறைவுற்றது. இதனால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 2:1 என்னும் கோல் கணக்கில் மாதகல் சென் தோமஸ் யுத் விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் பீ விளையாட்டு கழகமும் நாவாந்துறை கலைவாணி ஏ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 3:2 என்னும் கோல் கணக்கில் தாவடி காளியம்பாள் பீ விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் யாழ் ஐக்கிய ஏ விளையாட்டு கழகமும் உதயசூரியன் பீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 2:1 என்னும் கோல் கணக்கில் உதயசூரியன் பீ விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டு கழகமும் உதயசூரியன் பீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டி 1:1 என சமநிலையில் நிறைவுற்றது. இதனால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 2:1 என்னும் கோல் கணக்கில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

தம்பாட்டி காந்திஜி பீ விளையாட்டு கழகமும் சென் நீக்கிலஸ் பீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 2:1 என்னும் கோல் கணக்கில் சென் நீக்கிலஸ் பீ விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் பீ விளையாட்டு கழகமும் அராலி சென்ஸ்ரார் பீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 9:0 என்னும் கோல் கணக்கில் குருநகர் பாடுமீன் பீ விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

அரியாலை ஐக்கியம் ஏ விளையாட்டு கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 8:1 என்னும் கோல் கணக்கில் அரியாலை ஐக்கியம் ஏ விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது. (சு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இங்கிலாந்து டெஸ்ட் சமனிலை



இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பலத்த போராட்டத்தின் மத்தியில் சமனிலையில் முடிவடைந்தது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த 12-ம் திகதி லண்டன லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச்சுழற் சியில வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 130.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 575 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 138.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 453 ஓட்டங்களை குவித்ததுடன் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் குவித்த ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 222 ஓட்டங்களால் பின்னிலை வகித்தது.

222 ஓட்டங்கள் என்ற முன்னிலையில் தமது 2-வது இன்னிங்சை நேற்று முன்தினம் (4ம் நாள்) தொடங்கிய இங்கிலாந்து அணி, அன்றைய நாளின் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

390 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு நேற்று தமது தமது 2-வது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி ஆரம்பத்தில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினாலும் இறுதியில் விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

இறுதியில் இலங்கை அணி 2-வது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை எடுத்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தெரிவானார். (க)

# டிராவிட் சாதனையை சமன் செய்தார் சங்கா

இலங்கை, இங்கிலாந்து அணிகள் தங்கள் முதல் டெஸ்ட் போட்டியை லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடியது.

இந்த போட்டியில் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி 9 விக்கெட் இழப்பிற்கு 575 ஓட்டங்கள் குவித்தது. இதில் ரூட் அதிகபட்சமாக இரட்டை சதம் விளாசினார்.

இதைத் தொடர்ந்து தனது முதல இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 2-வது நாள் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 140 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

3-வது நாள் ஆட்டத்தில் சிறபபாக விளையாடிய சங்ககாரா தனது 36-வது சதத்தை அடித்தார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் 4-வது இடத்தில் உள்ள ராகுல் டிராவிட்டை அவர் சமன் செய்தார்.

இவர் 147 ஓட்டங்கள் (258 பந்து, 16 பவுண்டரி) எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். (க)

# உலக ஹொக்கிப் போட்டி அவுஸ்திரேலியா சம்பியன்



உலக ஹொக்கி தொடரின் இறுதிப போட்டியில் நெதர்லாந்து அணியுடன் மோதிய அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத்தை மீண்டும் கைப்பற்றியது.

13வது உலகக்கிண்ண ஹொக்கி போட்டி நெதர்லாந்து நாட்டின் ஹேக நகரில் நடந்து வந்தது.

இதன் இறுதிப்போட்டியில் நெதர்லாந்து- அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

முதல் 14-வது நிமிடத்தில் ஜெரோன் ஹெர்ட்ஸ்பெர்ஜர் கோல் அடித்துக் கொடுத்து நெதர்லாந்துக்கு மகிழ்ச்சி தேடித் தந்தார். அதன பிறகு தனது அதிரடியை தொடங்கியது அவுஸ்திரேலியா.

இறுதியில் ஆஸ்திரேலிய அணி 6:1 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி உலக சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது.

அவுஸ்திரேலியா வீரர் கிறிஸ் சிரிலோ அசத்தலாக 'ஹாட்ரிக்' கோல் அடித்தார். அவுஸ்திரேலியாவுக்கு இது 3-வது உலக பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வாள்வெட்டு...

மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் மாணவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்துள்ளார்.

மேலும் உயிரிழந்தவரின் சகோதரியும், சகோதரனும் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வாள்வெட்டுச் சம்பவம தொடர்பாக உரும்பிராய் கிழக்கினைச் சேர்ந்த எம்.நிரோஜன் (வயது 23) என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது.

கோண்டாவில் நாராயணன் கோவிலடியில் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் உரும்பிராய் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சாகசம் செய்த காரணத்தினால் அப்பகுதி இளைஞர்களுக்கும், உரும்பிராய் பகுதி இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் உரும்பிராய் பகுதியினைச் சேர்ந்த டி.ரொபின் ராஜ் (வயது 20), எம்.நிரோஜன் (வயது 23) என்ற இரு இளைஞர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக உரும்பிராயில் இருந்து வந்த இளைஞர்கள் குழு, கோண்டாவில் நாராயணன் கோவில் இளைஞர் ஒருவருடைய வீட்டிற்குள் புகுந்து சரமாரியாக வாள் வெட்டு நடத்தியுள்ளது.

இச் சம்பவத்தில் ரவீந்திரன் சுகிநதன் (வயது 19) என்ற சென.ஜோன்ஸ் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவன் கழுத்தில் வாள்வெட்டிற்கு இலககாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும் அங்கு வந்த இளைஞர்கள் குழு நடத்திய வாள்வெட்டில் உயிரிழந்தவரின் சகோதரியான ர.இலக்கியா (வயது 26), ர.செந்தூரன் (வயது 23) என்பவர்களும் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

வீடு புகுந்து வாள்வெட்டு நடத்தி அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் குழு அங்கிருந்து தப்பிச் சென்ற பினனர் அங்கு வந்த அயலவர்கள், காயப பட்டவர்களை மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்படி மேற்படி வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த உரும்பிராய் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த எம்.நிரோஜன் (வயது 23) என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தினைத் தொடர்ந்து இரு பகுதியினருக்கும் இடையில் தொடர்ந்து முறுகல் நிலை காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்றமான ஒரு சூழல் காணப்பட்டது. இதனால் அப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இரவு முழுவதும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். (எ-11)

# மெஸ்ஸி அபார கோல் ஆர்ஜென்டீனா வெற்றி






உலக கிண்ண கால்பந்து தொட[illegible]ன் நேற்றுமுன்தினம் நடந்த லீக் [illegible]ட்டியில் மெஸ்சிதலைமையிலான [illegible]ஜென்டினா அணி, போஸ்னி[illegible]வை 2:1 என்ற கோல் கணக்கில் [illegible]த்தி வெற்றிபெற்றது.

[illegible] சர்வதேச கால்பந்து கூட்டமைப் [illegible] சார்பில் 4 ஆண்டுக்கு ஒரு முறை [illegible]த்தப்படும் உலக கிண்ணப் போட்டி [illegible] இம்முறை பிரேசிலில் நடைபெறுகிறது.

மொத்தம் 32 அணிகள் பங்கேறகும் இத்தொடரில், ஆர்ஜென்டினா இடம் பெற்றுள்ள எப் பிரிவில் ஈரான், நைஜீரியா, போஸ்னியா என, எளிய அணிகள் தான் இடம் பெற்றுள்ளன. நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் ஆர்ஜென்டினா, போஸ்னியாவை சந்தித்தது.

பரபரப்பாக ஆரம்பமாகிய முதல் பாதியின் 3-வது நிமிடத்திலேயே போஸ்னியா வீரர் கொலாசினாக் 'சேம சைடு' கோல் அடித்தார். இதன் பின் முன்பாதியில் இரு அணி வீரர்களால் கோல் எதுவும் அடிக்கமுடியவில்லை. பன்விறுவிறுப்பாக நடந்த இரண்டாவது பாதியில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட ஆர்ஜென்டினா அணித் தலைவர் மெஸ்சி (65-வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதன்மூலம் ஆர்ஜென்டினா அணி 2:0 என முன்னிலை பெற்றது.

கடைசி வரை போராடிய போஸனியா அணிக்கு இபிசிவிக் (85) மட்டும் ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.

இதற்கு முன் நடந்த ஈ பிரிவு போட்டியில் ஹொன்டுரஸ் அணி, பிரான்ஸ் அணியிடம் 0:3 என தோல்வியுடைந்தது. (க)

# சமாதானத்தை ஏற்...

ப்யங்கரவாதிகள் பிரிவினைவாதத்தை விட்டுக்கொடுக்க தயாராக இருக்கவில்லை எனவும் இதனால் எமது அரசாங்கம் இராணுவ மூலோபாயம் மூலமாக அவர்களை தோற்கடிக்க முடிவு செய்தது.

பிரிவினைவாத போரில் ஈடுபட்ட விடு தலைப் புலிகள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் என அதிகாரிகளை படுகொலை செய்து சொத்துக்களை அழித்து கொடூரமான தாக்குதல்களை நாட்டில் நிகழ்த்தியுள்ளனா.

விடுதலைப் புலிகள் ; இலங்கையின் ஜனாதிபதி ஒருவர், இந்தியாவின் பிரதமர் ஒருவர், ஜனநாயக தமிழ் அரசியல் தலைவர்கள், அனைத்து சமூகங்களை சேர்ந்த பொதுமக்களையும் கொலை செய்தனர்.

அவர்கள் சிறு குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை. அத்துடன் சொத்துக்களுக்கு பாரிய சேதங்களை விளைவித்தனர் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை க்ருஸ் ஏற்றுமதி நிலையத்தில் பல நாடுகளின் தலைவர்களை சந்தித்த ஜனாதிபதி மகிந்த, நாட்டின் உண்மையான நிலைமைகளை விளக்கியதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

காபொன் பிரதமர் டேனியல் ஒனா ஒன்டா, உருகுவே ஜனாதிபதி ஜோஸ் முஜிகா, எக்கிவடோரியல் கினியா ஜனாதிபதி ஒபாயங் ஙெகுஹிமா மாபாசோகோ ஆகியோரைச் சந்தித்த ஜனாதிபதி இரு தரப்பு விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த...

ளைத்தலைமையகத்தின் 18 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதனைமுன்னிட்டு பாதுகாப்பு தலைமையகத்தினால் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனையொட்டி நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் சிவில் இணைப்பதிகாரி மற்றும் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படிச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கமுடியாமலே இராணுவத்தினர் எழுந்து சென்றனர். இதேவேளை மேற்படிக் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் விரைவில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்படும் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தினைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரி பிரிகேடியர் டட்லி வீரமன் மற்றும் 55 ஆவது படைத்தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவண உள்ளிட்ட ஐந்துபேர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் யாழ்.பலாலி பாதுகாப்பு கட்டளைத்தலைமையகத்தின் 18 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் 37 விதமான மக்கள் நலத்திட்டங்களை செய்யவுள்ளதாகவும் இதனை யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா ஏற்பாடு செய்துள்ளதாகவும் சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளையும், மக்கள் நலத்திட்டங்களையும் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 1500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைப்பயன்படுத்தி பல்வேறு மக்கள் நலத்திட்ட வேலைகளில் ஈடுபடப்போவதாகவும் வைத்தியசாலைக்கு வர்ணம் பூசும் நடவடிக்கையிலும், நோயாளர் காவுவண்டிகளை திருத்தி கொடுத்தல், சக்கர நாற்காலிகளைத் திருத்திக் கொடுத்தல் மற்றும் கண்பார்வை குறைவானவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள தூபிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு பாதுகாப்பு படைத்தலைமையகமான பலாலியில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை இடம்பெறவுள்ளதாகவும் இராணுவத்தினரின் விசேட அணிவகுப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், யாழ்.மாவட்டத்திலுள்ள படைப்பிரிவுகளினால் மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர் ஒருவர் பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் 18 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செய்யப் போவதாக கூறுகின்றீர்கள். ஆனால் யாழ். மாவட்டத்தில் யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த் பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்காக தற்போதும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் அவர்களின் காணிகளை வழங்கி மீள்குடியேற்றிவிட்டு,மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுத்தால் அந்த மக்களும் மகிழ்ச்சியாகயிருப்பார் என்றும் அதற்கான நடவடிக்கையினை எடுக்க இராணுவத்தினர் முன்வருவார்களா என்றும் கேள்வியெழுப்பிருந்தார்.

இந்தக்கேள்விக்கு பதிலளித்த 55 ஆவது படைத்தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவண தெரிவிக்கையில், இடம்பெயர்ந்துள்ள அனைவருக்கும் காணிகளை பகிர்ந்தளிக்க நாம் விசேட செயற்றிட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளோம். இதன்மூலம் அனைவருக்கும் காணிகள் வழங்கப்படவுள்ளது என்றார்.

இதன்போது குறுக்கிட்ட மற்றொரு ஊடகவியலாளர் , இடம்பெயர்ந்த மக்களின் சொந்தக் காணிகளையா வழங்கவுள்ளீர்கள் என்று கேள்வியெழுப்பினார், இந்தக்கேள்விக்கு இப்போது பதிலளிக்க முடியாது. இவ்வாறான கேள்விகளுக்கு பதிலளிக்கும் நோக்குடன் இந்த ஊடகவியலாளர் சந்திப்பினை ஏற்பாடு செய்யவில்லை. உங்களது கேள்விக்கு வேறொரு சந்தர்ப்பத்தில் பதிலளிக்கப்படும் என்று கூறிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு சென்றனர். (செ-6)

# ஆணொருவரின்...

குறித்த பகுதியினைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இராமச்சந்திரன் (வயது 55) என்ற நபரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தனது குடும்பத்தினருடன் கதைத்துக் கொண்டிருந்து விட்டு படுக்கையறைக்குச் சென்றவர் நேற்று திங்கட்கிழமை காலை சடலமாகவே காணப்பட்டார் என குடும்பத்தினர் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுவருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-6)

# குடும்பப்...

தெரிவித்தனர்.

வீட்டுத்திட்டத்தில் இவருக்கு வழங்கப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக கடன்களை பெற்று குறித்த பெண் வீடு கட்டியுள்ளதாகவும், இதன் காரணமாக கடன் தொல்லை இருந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் சடலம் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (செ-6)

# தங்கூசி...

தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் மண்டைதீவு மீனவர்கள் தாமாக முன்வந்து வலைகளை எரித்ததோடு இது போன்ற தடை செய்யப்பட்ட கடற்தொழில் நடவடிக்கைகளில் இனிமேல் தாங்கள் ஈடுபடமாட்டார்கள் என்றும் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றினையும் நேற்று கையளித்துள்ளனர்.

இதேவேளை தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப்பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக்கட்டுப்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

யாழ்.மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தை சேர்ந்த 150 அங்கத்தவர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திற்கு வருகை தந்ததுடன் இன்றில் இருந்து தங்கூசி வலைகளைப் பயன்படுத்த மாட்டோம் என கையெழுத்து இடப்பட்ட கடிதம் ஒன்றினை கையளித்தனர்.

இதன்படி யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி முன்னிலையில் மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு முன்பாக வைத்து தங்கூசி வலைகளும் மீனவர்களால் எரிக்கப்பட்டது.

தங்கூசி வலைகளுக்கு பதிலாக மாற்று வலைகளைத் தந்து உதவுமாறும் மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட மாட்டோம் என கூறி ஒரு கோடியே 20 இலட்சம் பெறுமதியான வலைகளை மண்டைதீவு மீனவர்கள் தாமாக முன்வந்து எரித்தனர்.

இதனைத் தொடர்ந்து தமது தொழிலை நேர்மையாக செயற்படுத்தும் வகையில் தமக்கான நூல் வலையினை வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந. கணேசமூர்த்தியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் பட்டி, றோலர், கனவாய்க் குழாய் ஆகியற்றை பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் வேறு பிரதேச மக்கள் மற்றும் இந்திய மீனவர்களின் செயற்பாட்டினையும் தடை செய்ய வேண்டும்எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-6)

# சுகாதார...

ளர் சி.தா.தர்மரட்ணம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி வாரம் யாழ்.மாவட்டத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து யாழ்.மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்கும் சந்திப்பு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றது. அதன்போதே செயலாளர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி வாரம் இன்று (நேற்று) ஆரம்பமாகியுள்ளது. அதன்படி பல்வேறு நிகழ்வுகளும் சமூக வேலைத்திட்டங்களும் மாநகர சபையினால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் யூன் 19ஆம் திகதி யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் இணைந்து சுகாதார எழுச்சி ஊர்வலம் ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். அதன்படி எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு குறித்த பேரணி ஆரம்பமாகவு ள்ளது. யாழ். மாநகர சபைக்கு முன்பாக ஆரமபமாகும் பேரணியானது பருத்தித்துறை வீதியூடாக ஆரியகுளம் சந்தியை அடைந்து அங்கிருந்து ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி,ஆஸ்பத்திரி வீதியூடாக மீண்டும் மணிக்கூட்டு கோபுர வீதியை அடைந்து அங்கிருந்து யாழ்.பொதுநூலக வீதியூடாக பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து துரையப்பா விளையாட்டு மைதானத்தை பேரணி சென்றடையும்.

மேலும் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(செ-6)

# இலங்கை...

37 பேரும் அவர்களது பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப்ப ணிப்பாளர் ந.கணேசமூர்த்தி முன்னிலையில் நேற்று மாலை குறித்த மீனவர்கள் 37 பேரும் கையொப்பம்மிட்டுக்கொண்டனர்.

யாழ்.வல்வெட்டித்துறை, நீர்கொழும்பு, மாத்தறை போன்ற பகுதிகளைச்சேர்ந்த மீனவர்களே இந்தியாவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# தமிழின...

னணி ஆகியன தமது முழுமையான ஆதரவினை வழங்கி போராட்டத்திலும் கலந்து கொண்டிருந்தன.

மேலும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆக்கிரமிப்பு இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், வாழவிடு வாழவிடு தமிழர்களை வாழவிடு, வலி.வடக்கு எமக்கு வேண்டும், அச்சுவேலி எமக்கு வேண்டும், பலாலி எமக்கு வேண்டும், மயிலிட்டி எமக்கு வேண்டும், தையிட்டி எமக்கு வேண்டும், காங்கேசன்துறை எமக்கு வேண்டும், வதைக்காதே வதைக்காதே தமிழ் இனத்தினை வதைக்காதே, அழிக்காதே அழிக்காதே தமிழ் இனத்தினை அழிக்காதே என்று கோஷங்கள் எழுப்பியிருந்தனர்.

தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றம், தமிழர் கடல்களில் சிங்கள ஆதிக்கம், தமிழின அழிப்பை அரசே நிறுத்து, நாம் எங்கு வாழ வேண்டும் என்பதை இராணுவம் தீர்மானிக்க முடியாது, எமது நிலம் எமக்கு வேண்டும் அரசே இராணுவத்தை வெளியேற்று என்று தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் காணப்பட்டனர்.

மேற்படி போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் .செயலாளர் செ.கஜேந்திரன், வட மாகாண சபையின் பேரவைத்தலைவர் ச.வி.கே.சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர்களான, பா.கஜதீபன், அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன், க.சர்வேஸ்வரன், என்.சிவயோகன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக இணைப்பாளர் பாஸ்கரா மற்றும் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலை 8.30 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற இப்போராட்டம் நண்பகல் 11 மணிவரைக்கும் தொடர்ந்து நடைபெற்றது. மேற்படி போராட்டத்தின் முடிவில் வலி.வடக்கு மற்றும் வளலாய் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றக் கோரியும், வலி.வடக்கு மக்களை வேறு பகுதிகளில் 'கொண்டு சென்று குடியேற்றுவதை தடுத்து நிறுத்தக் கோரியும் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் கோப்பாய் பிரதேசசெயலகத்திடம் கையளிக்கப்பட்டது. (செ-4)

# ஐ.நா...

க்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் இவ்வூடகத்துக்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவில் இடம்பெறும் நிபுணர் பதவிகளுக்கு இதுவரை எவரும் அதிகாரபூர்வமாக நியமிக்கப்படவில்லை.

எனினும், இந்த விசாரணைக்குழுவில் இடம்பெறும் இரண்டு நிபுணர்களில் ஒருவர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். அவர் பற்றிய விபரங்களை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிப்பார்.

இலங்கை மீது விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள விசாரணைக்குழுவின் முதல் கூட்டம் அடுத்த மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. ஐ.நா விசாரணைக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் குறித்த நியமனங்கள் அடுத்த சில வாரங்களுக்குள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விசாரணைக்குழுவுக்கு மூத்த நிபுணர்கள் ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குவர். ஆனால் அவர்கள் அதற்குத் தலைமை தாங்கமாட்டார்கள். இந்த விசாரணைக்குழுவுக்கு இவர்கள் நிபுணத்துவ வழிகாட்டலை வழங்கி, விசாரணைகள் சுதந்திரமாக இடம்பெறுகின்றனவா என்பதை கண்காணிப்பர். இவ்விசாரணைக்குழுவின் நிபுணர்களில் ஒருவராக டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியான போதும், அதனை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் இதுவரை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


நிரந்தர தொழில்வாய்ப்பு

18-50 வயது ஆண்-பெண் இருபாலாருக்கும் நிரந்தரதொழில். கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோடியல்/பிஸ்கட்/ ரொபி/ சோஸ்/ கிளவுஸ்/ காமெண்ட்/PVC/ காட்போட் போன்றதயாரிக்கும்தொழிற்சாலைகளில் + உற்பத்தி +, லேபல் + பொதியிடல் + தரம்பிரித்தல் பிரிவுக்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் (வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்) சம்பளம் 19000/=, 25000/=, 35000/= மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:- 0771116770 (C-7675)

கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள் 0779086737

GUNAA BEST PC Computer Repair

52,Hospital Road,Jaffna. (6775)

தேவை

கணனி அறிவுடன் ஆங்கில அறிவும் அத்துடன் ஆங்கில Typingம் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:-

Sanjai Travels and Tours

No.176. Temple Road, Jaffna.

T.P.No:-0775038925 OR

021 222 4713, 0773662465 (6771)

வேலைவாய்ப்பு

யாழ்.நல்லூர் பகுதியில் உள்ள பான்சி கடையில் பணிபுரியக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 0752045004


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org